# தமிழ்ப் பொழில்

3 – 4 – 5

ஆனி, ஆடி, 1932

ஊ211, N25T8
N32.3-4-5
207099

31 MAR 1932

உ

# தமிழ்ப் பொழில்.

ஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

ணர்: ரு. | பிரபவ – ஆடி, ஆவணி. | மலர்: ச, ரு.

## இராசராசன் I.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 56-பக்கம்.)

இனி, இவன் அரியணை ஏறியது தொட்டுப் பதினேழாவது யாண்டு வரையினும், சாசனங்கள், பெரும்பான்மையும் இவனை 'இராசகேசரிவர்மன்' எனவும், சிறுபான்மை 'மும்மடி சோழன்' எனவும் கூறிச்சென்றன. இவற்றுள், மும்மடி என்றது மூன்று மண்டலத்திற்கும் தலைவன் என்பதற்கு அறிகுறியான மும்முடி எனக் கொள்வாராயினர் ஒரு சிலர். அது பொருந்தாது. என்னை? மும்மடி, மும்மடங்கு எனப் பொருள்படுமே யல்லது மும்முடி எனப் பொருள்படுமாறில்லையாதலால். அன்றியும், மும்மண்டலங்களையும் பின்னரே கொண்டான் ஆகலால், அவற்றைக் கைக்கொள்வதன் முன் மும்முடிக் குரியனாதல்

யாங்ஙனம் பொருந்தும்? ஆகவே, மும்மடி என்பதற்கு எ
யோரைவிட மும்மடங்கு வன்மையுற்றவன் எனக்கோ
பொருத்த முடைத்தாதல் காண்க.

இனி, மதுரையைச் சார்ந்த தென்கரைக் கோயின்மண்ட
தூணொன்றில் காணப்படும் இவனது பதினேழாம் யாண்
சாசனத்தில் (Ep. collection No. 132 of 1910) இவனு
'இராசாச்ரயன்' என்ற பெயர் காணப்படுகின்றது.

இனி, இவன் சிற்றம்பலத்திற்குச் சகம் 926 அதா
கி.பி. 1004-ஆம் யாண்டில் நன்கொடை யளித்தனன் எ
'கோங்கு தேசராசாக்கள்' என்னும் உரைநூல் கூறுகின்ற
அதனால், இவனுக்கு 'இராசராசன்,' 'சிவபாதசேகரன்' எ
னும் பெயர்கள் அங்கு வழங்கப்பட்டன என்ப. அத்தே
இவனது பத்தொன்பதாம் யாண்டுச் சாசன மொன்றில் இ
னுக்கு இராசராசன் என்னும் பெயர் முதன்முதலிற் காணப்
கின்றது. இவனது கடைசி வருடமாகிய இருபத்தொன்ப
யாண்டில், இவனைச் 'சயங்கொண்டசோழன்' எனச் சாச
கள் வழங்கத் தொடங்கின. இவனது ஆட்சிக்காலம் கி. பி.
முதல் 1013 வரையினும் என்ப.

இனி, இவைகளையன்றிச் சோழமண்டலத்துப் பெரும்ப
யாகிய வளநாடுகட்கும் பிறவற்றிற்கும் முன்மொழியாகக் கொ
புற்று வழங்கிய சத்திரிய சிகாமணி, இராசேந்திர சிங்கன், பா
டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், இரட்ட
காலன், சத்தியாசிரயகுலகாலன் என்பன இவனது விருத
பெயர்களாகும்.

இன்னும், இவனுக்கு நித்தவிநோதன், இராசவித்தியாதர
நிகரிலிசோழன், உய்யக்கொண்டான், சநநாதன், பெரியபெ
மாள் என்ற பெயர்களும் வழங்கின.

இனி, இவ்விராசராசனது மெய்க்கீர்த்திகளிற் காணப்ப
வென்ற நாடுகளைக் கொண்டாராயின், தமிழ் நாடுகளும், இலங்
யும், இற்றை நாளையில் மைசூர், குடகு என வழங்கும் நாடுகளு



சென்னையின் வடக்கிலிருந்து வங்காள மாகாண எல்லைவரையில் ஒரிசா உட்பட்ட சென்னை இராசதானியும், மேலைக்கடற் றீவுகளும், விந்தியமலைக்குத் தெற்கான பம்பாய் இராசதானியும், நிசாம் இராச்சியத்தின் மேற்குப் பகுதியும் இவனது ஆட்சியின் கீழ் அடங்கியிருந்தவை என்று தெளியலாம்.

---

## இராசராசன் இராசராசேச்சரம் எடுப்பித்தது.

இனி, இராசராசன் தஞ்சையின்கண் பெரிய கோயில் எடுத்ததை ஆராய்வாம். திருமகளைப்போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமைபூண் டமைய, வென்றியும் புகழும் எங்கும் நிலவிட, நாடுமுழுவதும் அமைதியாக இருந்தமையின், இவன், தன் எண்ணத்தைக் கடவுட் டிருப்பணியில் செலுத்துதற்கு ஏற்ற காலம் இதுவெனக் கருதி, அற்றைநாளையிற் கலையினும் கைத்தொழிலினும் மேம்பட்டிருந்தாரது தொழில் நலம் *காண்டற்கிடமாய்ப், பிற்காலத்திய சிற்பம்வல்லுநர் செய்தொழில் தேரும் படிச் சந்தமாய்த், தென்னாட்டில் முன்னிருந்தாரது அறிவாற்றல்களை நினைவுறுத்தும் அடையாளமாய், வென்றிகுறித்துத் தன்னகர்க்கண் என்றும் நிலவுற இன்னவன் நாட்டி வைத்த வெற்றித்தூணமாய் இலங்கும் இராசராசேச்சரத் திருப்பணியை மேற்கொள்வானாயினன்.

இனி, இராசராசேச்சரம் என்பது இராசராசன் எடுத்த கோயில் என்று பொருள்படும். இராசராசன் எனும்பெயர், சிவநண்பனும் செல்வத்திற் சிறந்தோனுமாகிய குபேரனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். இப்பெயரைக் கேட்டார்க்கு, ஆண்டிக்கண் ஆராத காதலன் அளவில் செல்வத்தினன் எனச் சுட்டுதற்கு எண்ணம் பிறத்தலின், ஏனைய பெயர்களால் கோயில் எடுத்திடாது இப்பெயரால் எடுத்தனன் போலும். இப்பெயர், சகம் 926 அதாவது கி. பி. 1004-ஆம் யாண்டில, இவன், தன் பாட்டன் பராந்தகனைப்போலத், தில்லைச்சிற்றம்பலத்திற்கு நிபந்தங்கள் பலவியற்றி வழிபட்டதன் பயனாகத், தில்லைவாழந்தணரால் வழங்கப்

பட்டதென்பர். இராசராசன் எனும் பெயர் இவனது பத்தொன்பதாம் யாண்டுச் சாசனத்திற்றான் முதன்முதலில் காணப்படுகின்றது. இத்தகைய பெயர் ஏற்பட்ட பின்னரே இப்பெயரால் கோயில் எடுக்கும் எண்ணம் உண்டாகுவதியற்கை யாதலால், இவன் இராசராசேச்சரம் எடுக்கத்தலைப்பட்டது இவனது பத்தொன்பதாவது யாண்டில் என்று கொள்வது சால்புடைத்தாகும்.

இனி, நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரம் என இவன் கூறுமாற்றால், இவனுக்கு முன்னர் இக்கற்கோயில் இருந்ததில்லை என்பது போதரும். பென்னம் பெரிய இக்கற்றளியை நோக்குவார், இஃதென்னை தென்றிசைக்கண் எழுந்திட்ட மேருவோ, அன்றி விண்ணவர் இழிவதற் கமைத்துவைத்த படிகளின் வரிசையோ என்று ஐயுறுவர். கற்களை நெடுந்தொலையினின்று விரைவிற் கொணர்தற்கும், எத்துணைப் பருத்த பொருளையும் மிக்குயர்ந்த இடத்திற்கு ஏற்றுதற்கும் ஏற்ற கருவிகள் அருகியமைந்த அக்காலத்தில், இத்துணைப் பெரிய கற்கோயிலை எடுப்பதற்கு இவ்வரசர் பெருமான் கொண்ட பெருமுயற்சியினையும் போன்பினையும் என்னென்றுரைப்பது! இவன், மேலைச்சளுக்க மன்னன் சத்தியாசிரயனை வெற்றிகொண்டதற்காக, இவ்வாலயத்துப் பரமசுவாமிக்குப் பொற்பூக்கள் பல கொடுத்தமை சாசனத்தால் அறியக்கிடக்கின்றது. அவ்வெற்றி இவனது இருபத்திரண்டாம் யாண்டினிலாதலின், அப்பொழுது இக்கோயில் விமானம் ஒருவாறு கட்டப்பட்டிருத்தல் வேண்டும். இன்னும் இக்கோயிலுக்கு வேண்டு நிபந்தங்களும் பிறவும் 23-ஆம் யாண்டு தொட்டு 29-வரை கொடுத்திருப்பதாகச் சாசனங்கள் கூறுகின்றன. அதனால், இத்திருப்பணி பத்தொன்பதாம் யாண்டிற் றொடங்கி இருபத்துமூன்றில் பெரும்பான்மையும் முடிந்திருத்தலமையும் என்றூகிக்கலாம். “இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினால் உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்கக் குடுத்த செப்புக்குடம் ஒன்று. நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கின தகடுபல பொன் ஆடவல்லானென்னுங் கல்லால் நிறை இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தறுகழஞ்சரை”



என்ற சாசனப்பகுதியால் இவன் 25-ஆம் யாண்டு 275-ஆம் நாளில் தூபித்தறியில் வைப்பதற்குப் பொற்றகடு சுருக்கின செப்புக்குடம் கொடுத்தமை அறியக்கிடத்தலால், அக்காலத்துப் போலும் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிடேகம் நடந்தேறியது. இக்கோயில் விமானத்தில் 26-ம் யாண்டு 20-ம் நாளில் சாசனம் வெட்டுதற்கு இவன் கட்டளையிட்டிருப்பதும், இருபத்தைந்தாம் யாண்டில் இராசராசேச்சரத்திருப்பணி முடிவுற்றதை வலியுறுத்தி நிற்றலறிக.

இனி, இராசராசேச்சரத் திருப்பணி முடிந்த பின்னர், அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தினைத் திருக்கோயிலுள் எழுந்தருளச் செய்து, ஆதி சைவரைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்வித்த பொழுது, ஆவுடையார் வடிவம் பெரிதாயிருந்தமையின், மருந்திளகிப் பந்தனமாகாமற் போயிற்று. அது கண்டு இராசராசன் வருந்தி நிற்கையில், “கருவூர்த் தேவர் ஈண்டு வரின் நீ எண்ணிய எண்ணம் கைவரும்” என, விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக்கேட்ட அரசன் கவலை நீங்கி, ‘அப்பெரியார் யார்? அவரது வருகை எனக்கு எவ்வாறு கிடைக்கும்? என அங்கிருந்தாரை உசாவிய போது, தம் உருமாறி அவ்விடத்திருந்த போகநாத ரென்னும் யோகியார்,’ ‘அரச! கவலற்க; கருவூர்த் தேவர் என்பார், கருவூரில் அந்தணர் மரபிற் பிறந்து, சைவாகமங்களை நன்குணர்ந்து, சிவனே பரம்பொருள் எனத்தேர்ந்து, அவர்பால் அன்பு பூண்டொழுகிச், சிவயோகங் கைவந்த சித்தராய்ச் சிறந்திருப்பவர். அவரை இங்கு வரவழைப்பேம்’ என்றுரைத்திட்டு, ஓலை எழுதிக், தம் தவ வன்மையால் அதனைக் காக்கையின் காலிற் கட்டிவிடுத்தனர். அவ் வோலையைக் கண்ணுற்ற கருவூர்த் தேவர், அக்கணமே பொதிகையினின்றும் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்து, போகநாதரது ஆணைபெற்றுக் கோயிலுட் புகுந்து, சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்துச் செவ்வே நிறுத்தித், தம் வாயிற் றம்பலத்தை மருந்தாக உமிழ்ந்து இறுகப்பிடித்திடப், பொன்னை உருக்கி வார்த்தது போலப் பந்தனமாயிற்று. அப்பொழுது

அங்கிருந்தார் எல்லோரும் இறும்பூதெய்தி மகிழ்ந்தனர். இவ் வரலாற்றைக், கருவூர்ப்புராணத்திற் கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கத்துள்ள அடியிற்கண்ட செய்யுட்களிற் காண்க.

தேவர்பிரான்புனைகங்கைசிவணியதீம்புனனாட்டின்
மேவருதொல்சீர்வாய்விளங்குதஞ்சைமூதூரிற்
பூவலயம்பொறுத்தபுயப்புலிக்கொடிமேருவிற்பொறித்த
காவலனோர்குறிநிறுவக்கருதியுளந்தனில்வலித்தான்.

நேமிநெடுவரைநிவந்தநிறைமணிமாமதில்கோலிப்
பூமியினெண்டிசைநிலைத்தபொருப்பெனக்கோபுரநிறுத்திக்
கோமிளிர்பொற்கிரியெனப்பொற்கோயில்வகுத்தேமகிரி
யாமிதெனவேர்குவிந்தாங்கமைத்தொருமாமணிச்சிகரம்.

ஆயசதுமாமறைதொல்லாகமநூலருளியவா
றேயவொளிர்சிவலிங்கமிழைத்துமற்றவுடையார்
மேயவிருநான்காகவிளம்புமருந்தவையொருங்கத்
தோயமதித்தாதிசைவர்க்கொடுதொகுமாறியற்றுவித்தான்.

பாகுவராவினைத்தமருந்தினகியதுபற்றுமை
யேகுழிநேரியற்கிறைவன்யாதுகுறையெனக்கவலித்
தாகுதியாரழல்வேள்வியாற்றுவித்துமந்தணர்க்கும்
யோகுறுமாமுனிவருக்குமூட்டியரும்பொருளளித்தும்.

பந்தியாதிளகமனம்பருவரலுற்றுழையரைக்கூஉ
யுந்துமாரணியமுங்கண்முழையுமுறுவோர்க்குறுகி
முந்தியாமழைத்துமெனமொழிந்தவர்க்கொண்டணையுமெனச்
சந்தியாவருந்தவரைக்கொணர்ந்தார்கடணந்தோரே.

பொருந்தியசித்தரைநுணியபோதகரைமாதவரைப்
பருந்திலைவேற்குரிசிலெதிர்பணிந்துகுறைதீருமென்றான்.
மருந்துமணிமந்திரங்கொண்டமைந்தனர்கைவாராமை
யருந்தவருஞ்சலித்திருந்தாரரசனுமஞ்சலிததுநின்றான்.

யாவருந்துணிவுற்றெவன்கொலியற்றுமாறெனுமெல்லையிற்
றேவரும்புகழ்மாதவன்கருவூர்வருஞ்சிவயோகிவந்
தோவறப்பரிவோடுஞற்றினலாதுறுதெனுமோசையான்
மேவருந்திருவாக்கெழுந்துவிசும்பின்மீளமறைந்ததே.



மாகநாதமெழத்தபோதனரஞ்சினார்வளவன்சிவ
யோகநாதனிருக்கையாண்டுளதோதுமாதவிரென்றனும்
போகநாதனுருக்கரந்தொருபுடையடும்படைகொண்டுநின்
றேகநாதனியம்புமன்பனையிக்கணத்திவணுய்க்குதும்.

எனநகைத்திடுமுனைவருந்திறலிறைவனுங்கவலுறமனங்
கனைகுரற்கருமேனிவீறியகாரியின்சிறுகாலிடைத்
துனைவினீர்வருகென்றுரோலைதுவக்கியேகவிடுப்பவே
யனையதச்சிறுவரைதனிற்பொதியாசலத்தையணைந்தரோ.

முன்னரிற்படர்காரிகாலின்முடங்கலைக்கையடங்கவே
நன்னரிற்றெழுதார்பிணிப்பைநெகிழ்த்துநான்கொடுநாடினார்
புன்னெறித்தமியேனையோர்பொருளாய்நினைந்தனரோவெனாத்
தன்னிகர்த்தவரோலையக்கணம்வந்துசார்ந்தனர்தஞ்சையே.

புக்குருக்கொடணைந்ததுந்தனிப்போகநாதசுவாமிதன்
சித்துருக்கொடெழுந்ததுங்கருவூரர்வந்துசெறிந்தது
மத்திறத்தினிகழ்ந்ததுஞ்சிலராலறிந்தடலரசனும்
பத்திகூரவெதிர்ந்துவந்தனையாற்றினன்பகர்கின்றனன்.

அணுவுமேருவெனச்சிலம்புமொரணுவெனப்பரகாயமு
நணுகுநாயகநீயெனைப்பொருளாய்நடித்தனையென்னெனத்
தணிவிலாவருளுடையையாலிதுதானியற்றினமென்றுநற்
புணியசித்தரினிலைபெறுஞ்சிவபோகநாதனுரைத்தனன்.

அனையகாலையிலபயன்மீளவுமடியில்வீழ்வுறுமளவிலந்
கினைவறிந்திருள்கருமமாயையுநீத்தவன்றனைநேர்ந்துநந்
தனையனாயினுமெமர்களிற்றலையாயவன்சிவயோகிநீ
யுனைவிளித்ததுமிதினிமித்தமுளுற்றுவாய்குறியொண்மையின்.

அந்தவாய்மைமனக்கொளாவபயன்குயிற்றுபொனாலயஞ்
சிந்தையாதரமுற்றணைந்தனர்சென்றபோதவணின்றுளார்
முந்தையோர்தவசித்தர்மொய்த்துமுடிக்கொணுதைதமுற்றுவா
ரிந்தவேதியராமிதற்புதமறிதுமென்றுடனெய்தினார்.

மாமலைத்தலையதகமூலிமணிக்குழாமலிநெய்க்குடந்
தூமநாறியகுண்டமங்கிசுருக்கினோடுசருவமுந்
தாமமுஞ்சிதருப்பைகுண்டிகைதண்டுமண்டலமேதிகை
யோமமார்திரவியமுமாயிடையுளதெரிந்திளநகைசெய்தே.

பெருமைகூர்கருவூராராவுடையார்பிறங்குமிலிங்கமென்
றிருமைகூரிடனெய்தியேயிவைவிக்துநாதமெனத்தெளிந்
தொருமைகூர்தருபாவகத்தினுறைத்துவாயுமிழ்தம்பலை
யருமைகூர்விடரூடுபெய்தனரதிசயித்தனருலகெலாம்

உம்பருந்துணர்மாரிபெய்தனரோடைவைத்தழலூடெழுஞ்
செம்பொனாயிரமாற்றெனப்புரைசென்றுபற்றியதுமிழுவாய்த்
தம்பலின்னணமேயெனிற்றனிமாமுதற்பொருளாய்விளங்
கெம்பிரானருளன்பர்தஞ்செயல்யாவரேயறிவார்களே.

இனி, இங்குக் காட்டிய கருவூர்ப்புராணச் செய்யுட்களால், கருவூர்த்தேவர் தஞ்சைக்கு எழுந்தருளினாராதல் இனிது விளங்கும். அது நிற்க. இராசராசேச்சரத்து மேலைத் திருச்சுற்றுலையில் (பிராகாரத்தில்) வேம்பும் வில்வமும் நிற்கும் கிழக்கு நோக்கிய மேடை ஒன்றுளது. அதனைச் சுட்டி 'இஃது என்னென' எவரை வினவினும், 'கருவூரார் சமாதி' என்றே கழறுகின்றனர். ஆன்றோரும் அவ்வாறிசைத்து அதனை வலம் வந்து வழிபாடு செய்கின்றனர். அம்மேடையிற் கருவூரார் கோயிலெனச் சிறுகோயிலெடுத்து, யோகியர் உருவச்சிலை யொன்றமைத்துப் பலரும் வழிபட்டு வருவதையும் நாடோறும் பூசைநடப்பதையும் இன்றுங் காணலாம். வழக்கும் தொன்றுதொட்டு வரும் கேள்வியும் பற்றி மெய்யென்றுணரப்படும் ஐதிக அளவையைப் பொய்யெனல் அமையாது. ஆகவே, பிறர்க் குரிமையாக்காது கருவூரரொடு இயைபு படுத்துக் கூறும் அம் மேடை, இராசராசேச்சரத்துத் திருச்சுற்றுமாளிகையில் இடம்பெற்றிருத்தலின், கருவூர்த்தேவர்க்கும் இக் கோயிலுக்கும் இயைபுண்மை உய்த்துணரற்பாற்று. இஃது இவ்வாறுக.

இனி, கருவூர்த்தேவர் இராசராசேச்சரம் பாடியதை ஆராய்வாம். இவர், திருவிசைப்பா இயற்றிய ஒன்பதின்மருள் ஒருவராவார். இவர் பாடியருளிய பதிகங்கள் பத்தாகும். அவற்றை முறைப்படுத்த ஆன்றோர் தஞ்சை யிராசராசேச்சரத்து இசைப்பாவினை ஒன்பதாவதாக வைத்துள்ளார். இம் முறைவைப்பின் இயைபு காண்டற் கரியதெனினும், இராசராசேச்சரம், கங்கை



கொண்ட சோளேச்சரத்தை அடுத்து வைக்கப்பட்டுளது. கங்கை கொண்டான் என்பது இராசேந்திரனுக்குப் பெயராகும். இராசராசன் மகனாகிய இவன் கி. பி. 1012 முதல் 1043 வரையிலும் செங்கோல் செலுத்தினவன். ஆகவே, இராசராசன் இராசேந்திரன் என்ற இருவரும் எடுப்பித்த கோயில்களைப்பாடிய கருவூர்த்தேவரைப் பதினோராம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்திருந்தவர் எனக்கோடல் பொருத்தமுடைத்தாதல் காண்க. இவர், இராசராசேச்சர முடையார்க்கு மருந்து சாத்தி வழிபட்டபோது இசைப்பாப் பாடிலர்; என்னை? கங்கைகொண்ட சோளேச்சரம் பாடி இதனைப்பாடுதலின். ஆகவே, தலங்கள் பலவும் சென்று வணங்கி மீண்ட பின்னரே இராசராசேச்சரம் பாடினர் போலும் என்பதே அமைவுடைத்தாகும்.

இனி, தஞ்சை யிராசராசேச்சரத் திருவிசைப்பாக்கள், அன்பொழுகி இன்பம் பயக்கும் இயல்பினவன்றி, அற்றை நாளையில் தஞ்சை நகர், மன்னர் முடியோடு முடிதேய்ந் துக்க மணிகள் ஒளிவிடு மறுகும், கடலெனக் கம்பலை மிக்க தெருவும், நெடுநிலை மாடமும், அகில் கமழ் மாளிகையும், யாழ் பயிலிடமும், ஆடரங்கும், நாடகசாலையும், கழுநீர்ப் பொய்கையும், நந்தனவனமும், இஞ்சியும், கிடங்கும், பிறவும் பொலிதர இருந்த காட்சியைப் புலப்படுத்து மாட்சியும் உடையவாதலின், அவற்றினை ஈண்டு எடுத்தெழுதுவது இன்றியமையாததாயிற்று.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதி
யொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
வங்கனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே.

நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலாநெஞ்சினிலஞ்சிலம்பலைக்கும்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவேன்மறிதிரைவடபாற்றிடுபுனன்மதகில்வாழ்முதலை
யெற்றுநீர்க்கிடங்கிலிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

சடைகெழுமகுடந்தண்ணிலாவிரியவெண்ணிலாவிரிதருதரளக் [ய
குடைநிழல்விடைமேல்கொண்டுலாப்போதுங்குறிப்பெனேகோங்கிணரனை
குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்துக்கசெஞ்சுடர்ப்படுகுவையோங்
கிடைகெழுமாடத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

வாழியம்போதத்தருகுபாய்விடையம்வரிசையின்விளக்கவினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலராதிச்சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்கங்குல்வாயங்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

எவருமாமறைகளவையும்வானவர்களீட்டமுந்தாட்டிருக்கமலத்
தவருமாலவனுமறிவரும்பெருமையடலழலுமிழ்தழற்பிழம்ப
ருவரிமாகடலினொலிசெய்மாமறுகிலுறுகளிற்றரசினநீட்ட
மிவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

அருளுமாறருளியாளுமாறாளவடிகடமழகியவிழியுங்
குருளும்வார்காதுங்காட்டியான்பெற்றகுயிலினைமயல்செய்வதழகோ
தரளவான்குன்றிற்றண்ணிலாவொளியுந்தருகுவால்பெருகுவான்றெருவி
லிருளெலாங்கிழியுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்றளிரிறப்பிலையுதிர்வென்றா
னினைப்பருந்தம்பாற்சேறலின்றேனுநெஞ்சிடித்துருகுவதென்னோ
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையங்கழுநீர்ச்சூழன்மாளிகைசுடர்வீசு
மெனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்தாம்பலரேம்பலித்திருக்க
வென்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்தவெளிமையையென்றுநான்மறக்கே
மின்னெடும்புருவத்திளமயிலனையார்விலங்கல்செய்நாடகசாலை [ன்
யின்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்கே.

மங்குல்சூழ்போதிலொழிவறநிறைந்துவஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பா
ரங்கழற்சுடரா மவர்க்கிளவேனலலர்கதிரனையவாழியரோ
பொங்கெழிற்றிருநீறழிபொசிவனப்பிற்புனறுளும்பவிர்சடைமொழுப்ப
ரெங்களுக்கினியரிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

தனியரெத்தனையொராயிரவருமாந்தன்மையரென்வயத்தினராங்
கனியரத்தருநீங்கரும்பர்வெண்புரிநூற்கட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலர்புரிசடாமகுடர்புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரெத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.



சரளமந்தாரசண்பகவகுளசந்தனநந்தனவனத்தி
னிருள்விரிமொழுப்பினிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவரை
யருமருந்தருந்தியல்லறீர்கருவூரறைந்தசொன்மாலையீரைந்தின் [ரே
பொருண்மருந்துடையோர்சிவபதமென்னும்பொன்னெடுங்குன்றுடையோ

இனி, "பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி இராஜராஜேச்வரம்" எனச் சாசனத்துக் காணப்படுதலின், கோயில் எடுக்கப் பட்டுள்ள இடம், நாட்டின் பெரும்பகுதியுள் ஒன்றாகிய பாண்டிய குலாசனி வளநாடு என்பது பெறும். பாண்டிய குலாசனி என்றது இராசராசன் விருதுப்பெயர்களுள் ஒன்று. அதற்குப் பாண்டிய குலத்திற்கு இடியேற்றை ஒப்பவன் என்பது பொருள். இவ் வளநாட்டைச் சார்ந்த தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்க்கண் எடுக்கப்பட்டுள்ள திருக்கற்றளியாகிய இராசராசேச்சரத்துக்குத் திருவாயில்கள் மூன்று இருக்கின்றன. இவ்வாறு கோயில்கட்கு வாயில் மூன்றமைப்பது பண்டைக்காலத்து வழக்குப் போலும். பண்டை நாளைய வழக்குகளைப் பாராட்டிக் கூறும் பெரியபுராணம், முதற் கோபுர வாயிலைத் தோரண வாயில் எனவும், இரண்டாம் வாயிலைத் திருமாளிகை வாயில் எனவும், மூன்றாம் வாயிலைத் திருவணுக்கன் திருவாயில் எனவும் வழங்கும். இவனோ என்றால், அவற்றை, முறையே கேரளாந்தகன், இராசராசன், அணுக்கன் எனப் பெயரிடுவானாயினான். இவன், இம்முறையின் அமைத்தவிடத்தும், கேரளாந்தகனுக்கும் அணுக்கனுக்கும் இடையே இராசராசனை வைத்திருப்பதை நோக்குமிடத்து இராசராசன், பகைவர்க்குச் சேய்மையனெனினும், அரனடிக் கண்மையன் என்றாய்த்துணரக் கிடக்கும் அருமை பாராட்டற் பாலது.

இனி, இக்கோயில் விமானம் 200 அடி உயரமுடையதாகும். அதன் உச்சியில் போடப்பட்டுள்ள தளம் ஒரே கருங்கல், எறக்குறைய எண்பது டன் நிறையுள்ளது, எனத் தஞ்சை சில்லா கெசட்டியர் கூறுகின்றது. இவ் விமானத்தின் மேல் தூபித்தின் தறியில் வைக்கப்பட்டுள்ள செப்புக்குடம் நிறை மூவாயிரத்து எண்த்து

பத்து மூன்று பலம். அதன் மீது போர்த்த பொற்றகடு இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறரைக் கழஞ்சு. இக்கோயிற்குக் கும்பாபிடேகம் நடைபெற்றது கி. பி. 1009-ஆம் யாண்டாகும்.

இனி, கீழைக் கோபுரவாயிலினும் சண்டேசர் ஆலயத்தினும் வெட்டப்பட்டுள்ள சாசனங்களில், முந்நீர்ப்பழந் தீவு பன்னீராயிரம் கொண்டமை கூறப்படாமையால், அவற்றைக் கொள்வதன்முன் இவை எடுக்கப்பட்டனவாகும் என்று கொள்க. இக்கோயிலின் திருச்சுற்றுமாளிகையிற் பெரும்பான்மையும் இராசராசன் ஆணையின் பேரில் சேனாபதி கிருஷ்ணன் ராமனான மும்முடி சோழ பிரமமாராயனால் எடுக்கப்பட்டதாகும். இச்செய்கை தென்புறத்தில் இரண்டிடத்தும் மேற்புறத்து ஓரிடத்தினும் திருச்சுற்றாலையில் எழுதப்பட்டிருத்தலைத் தென்னிந்திய சாசனத் தொகுதி II பகுதி II எண் 31, 33, 45 களிற் காண்க. இச் சுற்றாலையில் எட்டுப்புறத்தினும் திக்குப்பாலர் எண்மருக்கும் கோட்டங்கள் சமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள், கல்லிற் செதுக்கிய அழகிய திசைகாப்பாளர் திருமேனிகளைக் காணலாம். அவ்வாலயங்களின் மீது கற்கலசங்களே இக்காலத்துக் காணப்படினும், பொற்றகடு சுருக்கின செப்புக்குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசானசிவ பண்டிதரால் கொடுக்கப்பட்டன என்று S. I. Ins. Vol. II Part IV No. 90 ஆல் அறியக்கிடக்கின்றது. ஆலயத்துப் பிள்ளையார் மேலைச் சுற்றாலயத்து வீற்றிருப்பவராதலால், இற்றை நாளையிற் காணப்படும் பிள்ளையார் கோயில் தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர் சரபோசி II எடுத்ததென்ப. தக்கணாமூர்த்திக்கு அக்காலத்தில் கோயில் கட்டப்படவில்லை. சாசனத்தை இடையே மறைத்து இவ்விடத்தும் பிறதளிகளினும் இவ்வாலயம் எடுக்கப்பட்டிருப்பதை ஆராயின், தனியே ஆலயமெடுத்துத் தக்கணாமூர்த்தியை வழிபடும் வழக்குப் பிற்காலத்திலேற்பட்டது போலும் என்றூகிக்கலாம். தனக்குப் பின்புறத்திருந்து அடைக்காய் தந்தவன் அரசனென்றறியாது வாங்கியுண்ட சிற்பர்கள் தலைவன், தன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டிச் சுப்பிரமணியர் ஆலயம் எடுத்தனன் என முன்னோர்கள் கூறுவர். அம்மன் கோயில், இவ்வாலயத்திற்கு வடபுறத்துள்ள சிவகெங்கைத் தோட்டத்திலிருந்தது. நாயக்க வரசர் காலத்தில் இடித்துவிட்டனர் என்ப. இப்போது இருப்பது பிற்காலத்தில் எடுக்கப்பட்டதென்பதைப் பார்ப்பவர் கண்கூடாகக் காண்பர்.



இனி, ஆராயுமிடத்து முன்னாளில் சண்டேசரைத் தவிர ஏனையவர்க்குத் திருச்சுற்றாலயத்தில் ஆலயம் எடுப்பித்ததாகத் தெரியவில்லை. சண்டேசர், சிவபெருமானுக்குரிய பொருளையெல்லாம் எவரும் கவர்ந்து செல்லாது கண்காணிக்கும் அதிகாரமுடையவர் என்பது முந்தையோர் கொள்கையாகும். அதைப் பின்பற்றியே கோயிலைப் பொறுத்தன யாவும் அக்காலத்தில் அவர் வாயிலாகவே நடைபெற்றுவந்தன. அதனை "ஸ்ரீ ராஜராஜீச்வரத்தி னினிதெழுந்தருளி இருந்த பரமச்வாமிக்கு மூலவிருத்தியனாகிய சண்டேச்வர தேவர் பக்கல் பொலிசை யூட்டுக்குக்கொண்ட ஊர் கல்லில் வெட்டின." என்னும் சாசனப்பகுதியால் அறியலாம். சிவாலயத்திற்குச் செல்பவர், சிவதரிசனம் செய்து முடிந்த பின் ஆலயத்தினின்று புறப்படுமுன்னர்ச் சண்டேசர் ஆலயத்தையடைந்து, 'சிவசொத்துக்களில் ஒன்றும் கொண்டு சென்றிலேம், எம் கரங்களைப் பார்த்தருளும்' என்பார் போலத் தம் கையொடு கையைத் தட்டிக்காட்டிச் செல்லும் வழக்கு இன்றுங் காணப்படுதலால் இவ்வுண்மை விளங்கும்.

இனி, இவ்வாலயத்துள்ள நந்தி ஒரே கல்லிற் செய்யப்பட்டது. பன்னிரண்டடி உயரமும், பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகால் அடி அகலமும் உடையது. இந் நந்தி மண்டபம் தஞ்சை நாயக்க அரசர் நாளையிற் கட்டியதாகும்.

இனி, இராசராசேச்சரத்து விமானம் (பெரிய கோபுரம்) தக்கணமேரு எனப்படும். அதனுள் வீற்றிருக்கும் தியாகேசர் தக்கணமேரு விடங்கர் எனப்படுவார். விடங்கர் என்னும் வடசொல் உளியாற் செய்யப்படாதவர் என்று பொருள்படும்.

இனி, இராசராசன் இத்தக்கணமேரு விடங்கரையன்றி, பிள்ளையார், சண்டேச்வர பிரசாததேவர், பஞ்சதேக மூர்த்திகள்' சுப்பிரமணிய தேவர், தக்கணாமூர்த்திகள், சந்திரசேகரதேவர்' மகாவிட்டுணுக்கள் திருமேனிகளை எழுந்தருளுவித்தனன். அவன் மனைவியருள் ஒலோகமகாதேவியார் பிச்சதேவரையும், சோழமகாதேவியார் ஆடவல்லான், இடபவாகன தேவரையும், அபிமான வல்லியார் இலிங்கபுராண தேவரையும், திரைலோக்கிய மாதேவியார் கலியாண சுந்தரரையும், பஞ்சவன்மாதேவியார் தஞ்சையழகர், பதஞ்சலி தேவரையும், பிருதிவிமாதேவியார் சிகண்டமூர்த்திகளையும், இலாடமாதேவியார் பாசுபதமூர்த்திகளையும் எழுந்தருளுவித்தனர். இவர்களையன்றி, சேனாபதி கிருஷ்ணன் இராமனான மும்மடிசோழ பிரமமாராயன் அர்த்தநாரீச்வரரையும், பெருந்தரம் நடார் கிழான் வேளானாதித்தனான பாரந்தகப் பல்லவரையன், உமாசகிதரையும், கோவன் அண்ணாமலையான கோளாந்தக விழுப்பரையன், பிரிங்கிசர் சூரியதேவரையும், பெருந்தரம் ஈராயிரவன் பல்லவனான மும்மடி சோழபோசன், சண்டேச்வர தேவரையும், அதிகாரி உதயதிவாகரன் தில்லையாளி, கிராதார்ச்சுனதேவரையும் எழுந்தருளுவித்தனர். *சீகாரியம் பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான், அடியவரிடத்தும் அரசனிடத்தும் பேரன்புடையோராதலின், நம்பி ஆரூரனார், நங்கை பரவையார், திருநாவுக்கரைய தேவர், திருஞானசம்பந்தடிகள், தத்தாநமரேகாண் என்ற மிலாடுடையார், சிறுத்தொண்டநம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், பெரியபெருமாள் (இராசராசன்) இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமங்களையும், க்ஷேத்திரபாலதேவர், சீ பைரவமூர்த்திகள் திருமேனிகளையும் எழுந்தருளுவித்தனர். இத்திருமேனிகளுட் பெரும்பாலன இப்போது காணப்படாமை வருந்தத் தக்கது.

இனித், திருமுறைகண்ட இவன் காலத்தில், எட்டாவது திருமுறையாகிய திருவாசகம் பாடியருளிய மாணிக்கவாசகர் பெயர் தெரிந்திருந்தும், ஏனைய மூவரோடு இவரையும் எழுந்தருளச் செய்யாமைக்குக் காரணம் புலப்படவில்லை. இவனும்,



இவன் மனைவியரும், பிறரும் பற்பல சிவமூர்த்தங்களை எழுந்தருளுவித்தமை அறியக்கிடப்பினும், வாகனங்கள் செய்து கொடுத்தமை காணப்படாமையின், இக்காலத்திற்போல அக்காலத்தில் யானை, குதிரை, பூதம் முதலியவற்றில் புறப்பாடு செய்விக்கும் வழக்கில்லை போலும். இன்னும் பலதிறப்பட்ட சிவமூர்த்தங்கள் கேட்கப்பெறினும் அவர்கட்குரிய அம்மையின் பெயர், இற்றைநாளையிற் போலப் பலதிறப்பட வழங்கப்பெறாமல், 'உமாபரமேச்வரி' எனவே வழங்கப்பட்டிருத்தல் ஆராயத்தக்கது.

இனி, இவன் சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொடுபோந்த பொன்னாற் செய்து 'சிவபாத சேகரன்' என்றும் 'ராசராசன்' என்றும் திருநாமம் வாங்கிய காளங்கள், திருப்பள்ளித்தொங்கல் மகுடம், தவளச்சத்திரமகுடம், வண்ணிகைத் திருக்கொற்றக்குடைமகுடம், ஈச்சோப்பிகை, காளாஞ்சி முதலிய திருச்சின்னங்களும், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த திருப்பரிகலங்களும், பொன்னிற் செய்து நவமணி பதித்த திருவாபரணங்கள் பலவும் கொடுத்தனன். இவன் திருத்தமக்கையார் குந்தவையார் கொடுத்துள்ள அணிகலன்களுக்கும் பிறவற்றிற்கும் அளவில்லை. அணிகலங்களை எவரும் மாற்றிவிடாவண்ணம் அரக்கு, செப்பாணி, சரடுகளை நீக்கிப் பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிக்கப்பெற்றிருப்பின்,* அவை இத்துணை, இவ்வளவு நிறையுடையன, இன்னின்ன தன்மையன என்றுரைத்து விலையும் கண்டிருப்பது பாராட்டற்பாலது.

இனி, கோயில் காரியம் பார்ப்பவரை சீ காரியம் பார்ப்பவர் எனவும், அவரைக் கண்காணிப்பவரை சீ காரியக் கண்காணி நாயகம் எனவும் வழங்கி வந்தனர். அக்காலத்தில் இராசராசேச்வரத்தில் சீ காரியஞ் செய்தவர் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவர். சீ காரியக் கண்காணி நாயகம் செய்தவர் பாண்டிநாடான ராசராச மண்டலத்துத் திருக்கானப்பேர்க் கூற்றத்துப் பாளூர் கிழவன் அரவணையான் மாலரிகேசன் ஆவார். இராசராசேச்சரத்து அருச்சகர் சைவாச்சாரியன் பவனபிடாரர்.

இனி, திருமுன்னர் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத்தமிழில் வல்லார் நாற்பத்தெண்மரை உடுக்கை வாசிப்பான் ஒருவன், கொட்டிமத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஏற்படுத்தினான். இவ் வைம்பதின்மரும் நிசதம் நெல்லு முக்குறுணியாக நிபந்தம் பெற்றனர். இவரைப் பிடாரர் எனச் சாசனம் கூறுகின்றது. பிடாரர் என்பது, இற்றை நாளையிற் பாம்பு பிடிப்பாரைக் குறிக்கும் பெயராக வழங்குதலின், அது பட்டாரகரின் மரூஉப் பெயர்போலும் என்னலாகும். இவ் வைம்பதின்மரையும் ராசராச பிச்சனை சதாசிவன், மாதேவன், திருநான சம்பந்தனை ஞானசிவன், கயிலாயன் ஆரூரான தர்மசிவன் என்றின்னோரன்ன சிவன் என வழங்கியிருத்தல் பாராட்டற்பாலது. இவர்களையன்றிக் கானபாடி, ஆரியம் பாடுவார், தமிழிசைபாடுநரும் இருந்தனர்.

இனி, ஆலயத்துக்குரிய பணிகளைக் செய்வதற்காகச் சோழநாட்டுப் பிறதளிகளினின்றும் குடியேற்றம் பெற்ற பதியிலார் நானூறு பேர்கள் இருந்தனர். இராசராசேச்சரத்தை அடுத்து வடபுறத்தினும் தென்புறத்தினும் அவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வேலி நிபந்தம் கொடுக்கப்பட்டது. அன்னவர் பெயர்க்கு முன்னர் நக்கன் எடுத்த பாதம், நக்கன் சோழகுல சுந்தரி, நக்கன் ராசகேசரி என்றாற்போல நக்கன் என்னும் பெயர் புணர்க்கப்பட்டிருக்கும். அவர்களுள் ஆடல் பாடல்களில் வல்லுநர் பலர் உண்டு.

இனி, பாடுவோர் காந்தர்விகள் எனப்பட்டனர். காந்தர்வரும் எழுபத்தைவர் இருந்தனர். கொட்டிமத்தளக்காரர், பக்கவாத்தியர், வீணை வாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்க முழக்குவோரும் இருந்தனர். உவச்சப்பறை, சகடை, காடிகை என்னும் பறைவிசேடங்களும் இருந்தன.

(தொடரும்.)

# கல்வி.

(முற்றொடர்ச்சி. துணர்-2. பக்கம் 470.)

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், தமிழாசிரியர்,
ஈபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

கல்வியால் அறம் பொருளின்பமாகிய பயன்கள் இம்மையில் மிக விளையாதொழியினும்

'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

என்று செந்நாப்போதார் கூறியவாறு, அது வரும் பிறவிகளினும் தொடர்ந்து அப்பயன்களை விளைத்து உயிர்க்கு அரணாதல் ஒருதலை.

இனி, கற்க வேண்டுவன யாவென நோக்குவோம். வடமொழிவாணர் கலைகள் அறுபத்து நான்கு என வகுத்துள்ளனர். அவற்றுள், ஆகருடணம் முதலிய அட்ட கன்மங்கள், பல்வகைச் சாலங்கள், நவமணிப் பரீட்சைகள், யானை, குதிரை முதலியவற்றின் பரீட்சைகள் என்றிவை முதலியவெல்லாம் தனித்தனி ஒவ்வொரு கலைகளாக எண்ணப்பட்டுள்ளன. அவற்றுட் சோரத வித்தைகளும், தொழிற்றிறங்களும் மற்றும் எத்தனையோ உள்ளன. மேல்நாட்டினரின் ஆராய்ச்சியால் உண்டாகிய புதிய கலைவகைகளும் பல. இவையாவும் எல்லாராலும் கற்றற்பாலன வல்ல; கற்க வேண்டியனவும் அல்ல. இவற்றிற் பெரும்பாலன தொழிற்பயிற்சி என்னும் பெயரால் வேறு பிரித்தெண்ணத் தகுவன. மாந்தரனைவரும் ஒருதலையாகக் கற்கவேண்டிய கல்வி யாவது அறிவை வளர்த்து மக்கட் பண்பை நெறிப்படுத்து உண்மையை உணர்த்தி இம்மை மறுமை வீட்டின்பங்களை நல்க வல்லனவாய்ப் புலத்துறை முற்றிய சான்றோர்களால் அவ்வம்

மொழிக்கண் இயற்றப்பட்டுள்ள இலக்கியங்களையும் விதிநூல்களையும் உண்மைநூல்களையும் கற்றுணர்தலாம். அவற்றின் பொருள்களை ஐயந்திரிபற உணர்தற்கு இலக்கண நூற்பயிற்சியும் அளவை நூற்பயிற்சியும் இன்றியமையாதனவாகலின், அவையும் ஒருதலையாகக் கற்க வேண்டுவனவாகும். அவற்றின் இன்றியமையாச் சிறப்பு நோக்கியே

'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'

எனத் தெய்வப் புலவரும் அருளிச்செய்வாராயினர். தமிழைப் பொறுத்தவளவில், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் என்னும் இலக்கியங்களும், திருக்குறள், நாலடிநானூறு, பழமொழி நானூறு முதலிய விதிநூல்களும், சமயகுரவர் முதலாயினோர் அருளிச்செய்த சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் வைணவ சமயப்பெரியார்கள் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தமும் ஆகிய உண்மை நூல்களும், தொல்காப்பியம் என்னும் கருவிநூலும் கற்கவேண்டிய தலைசிறந்த நூல்களாகும். துறைதொறும் மற்றும் சிறப்புடைய நூல்கள் பலவுள்ளன. தொல்காப்பிய உரைகள், களவியல் உரை, திருக்குறட் பரிமேலழகர் உரை முதலிய உரைகளும் படித்தறியற்பாலன. இவையனைத்தும் நன்கு கற்றோரே தமிழிற் புலமையுடையோராவர். உண்மைநூல் ஆராய்ச்சி செய்வோர் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்னும் சைவசித்தாந்த நூல்களையும், அவற்றிற்குச் சிவஞான யோகிகள் இயற்றிய உரைகளையும் கற்றுணர்தல் வேண்டும். முற்குறித்த நூல்களுள்ளே திருக்குறளானது உறுதிப் பொருளெய்துதற்குரிய மக்கள் ஒழுகலாறுகளை வரையறுத்துணர்த்தும் சீரிய விதிநூலாக இருப்பதன்றி, ஒப்புயர்வற்ற திப்பிய இலக்கியமாகவும் உண்மை நூலாகவும் திகழ்கின்றது.

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள் வெண் பா'



என ஆன்றோர் கூறியது எட்டுணையும் புனைந்துரையன்று. தமக்கு எய்ப்பில் வைப்பாகக் கிடைத்திருக்கும் அம் மெய்ப்பொருட் களஞ்சியத்தில் நுழைந்து தம் அறிவால் முகந்த அரும்பொருள்களை நுகர்ந்து மிடிதீர்ந்தின்புற்றிருத்தல் தமிழ்மக்கள் எல்லாருக்குமுரிய கடனாகும். தமிழரேயன்று; பிறமொழியாளரில் அம்மொழிகளைக் கற்றுத் துறை போயினாரும் தம் உணர்வு ஐயந்திரிபில்லதும், தம்புலமை குறைபாடில்லதும் ஆதலை விரும்பின், முடிவாகக் கற்றுணரற் பாலது திருக்குறள் என்னும் தெய்வச் செந்தமிழ்த் திருமறை யென்பது தேற்றம்.

இனி, கற்கத் தகுந்தனவாகிய இத்தகைய நூல்களை எங்ஙனம் கற்றல் வேண்டுமென்று பார்ப்போம். 'கற்க கசடறக் கற்பவை' என்றார் திருவள்ளுவர். கசடறக் கற்றலாவது ஐயம் திரிபு அறக் கற்றலாகும். ஐயமாவது குற்றியோ மகனோ, கயிறோ, அரவோ, இப்பியோ, வெள்ளியோ என்றாற்போல ஒன்றிலே துணிவு பிறவாது நிற்கும் பலதலையாய உணர்வு. திரிபாவது குற்றியை மகனென்றும், கயிற்றை அரவென்றும், இப்பியை வெள்ளியென்றும் உணர்தல்போல் ஒன்றினைப் பிறிதொன்றாகத் துணியும் மயக்கவுணர்வு. ஒருவன் எத்தனை நூல்களைப் பரிந்து தேடிப் படித்து அவற்றைத் தன் நெஞ்சினிடமெல்லாம் நிறைத்துவைப்பினும், அவற்றின் பொருளை உள்ளவாறுணரானாயின் அவன் எய்தும் பயன் என்னை? பல நூல்களையும் பயின்று அவற்றின் பொருளை நுண்ணிதின் ஆராய்ந்துணர்ந்த அறிவுடையோரே கற்றார் எனப்படுவர். நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினுஞ் சென்ற அறிவில்லாதவன் யாவன் அவன் கல்லாதவன் என்பது தோன்ற வள்ளுவனாரும் கல்லாமை என்னும் அதிகாரத்தில்

'நுண்மா ணுழைபுல மில்லா னெழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று'

என்றமை காண்க. அத்தகைய நுண்ணறிவு இயல்பிலே வாய்க்கப் பெறாதாரும் நூல்களை இடையறாது பயின்று ஆராய்தலினால் அதனைப் பெறுதல் கூடும். நூலாராய்ச்சியும் நுண்ணறிவும் ஒன்றற்கொன்று துணையாக நிற்றல் கண்கூடு. எனவே

கல்வி என்பது தொல்லோர் இயற்றிய நூல்களை அப்படியே பாடஞ் செய்த லென்பதன்று; அவற்றை நன்கு ஆராய்ந்து பொருளுண்மை காண்டலே கல்வியாகும். இன்னும் பார்க்கின், அவற்றின் பொருள் அல்லது கருத்தை அறிதல் மட்டும் போதாது; அவை ஒன்றற் கொன்று மறுதலையாயவழி அவற்றுள் மெய்யிது பொய்யிது வெனத் துணிதலும் வேண்டும்.

"பத்தொ டொன்பது படை நூல்களும்
மாறு படுதல் வழக்கே யன்றியும்
ஒவ்வொரு படையி னுள்ளே யோரின்
பலநூன் மாறு படுமே யன்றியும்
ஒவ்வொரு நூற்கட லுள்ளே யோரின்
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யைந்தனுள்
ஒன்றனை யொன்றே யொழிக்கு மன்றியும்
ஓரதி காரத் துள்ளே யோரின்
ஓரியல் விதியினை யோரிய லொழிக்கும்
ஓரிய லதனி னுள்ளே யோரின்
ஒருசூத் திரவிதி யொருசூத் திரவிதி
தன்னைக் கடுத்துத் தள்ளு மன்றியும்
ஒருசூத் திரத்தி னுள்ளே யோரின்
ஒருவிதி யதனை யொருவிதி யொழிக்கும்
நூலா சிரியர் கருத்தினை நோக்காது
ஒருசூத் திரத்திற் கொவ்வொரா சிரியர்
ஒவ்வொரு மதமா யுரையுரைக் குவரே
அவ்வுரை யதனு ளடுத்தவா சகங்கட்கு
அவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பொருள் கூறுவரே"

என இலக்கணக் கொத்துடையார் எடுத்துக் காட்டியவாறு தொல்லை நூல் உரைகளின் அமைப்பு முறையையும், அவை ஒன்றை யொன்று மறுத்தும் ஒன்றோடொன்று முரணியும் செல்லு மாற்றையும் ஓரின் உண்மைப் பொருள் காண்டற்கு ஆராய்ச்சி எத்துணை இன்றியமையாத தென்பது புலப்படும். இக் கருத்தானன்றே



"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

எனப் பொய்யில் புலவரும் கூறிவைத்தனர். ஆராய்ச்சியின்றேல் மக்களின் அறிவு வளர்ச்சியடைதற்கு வழியில்லை. ஒரு மொழியானது துறைதோறும் எண்ணிறந்த நூல் உரைகளைக் கொண்டு மிளிர்வது அம்மொழியினையுடைய மக்களின் ஆராய்ச்சித் திறத்தினால் ஆயதேயாம். மேனாட்டினரிடத்திற்போல நம்மவரிடையே ஆராய்ச்சி காணப்படாமையாற்றான் இற்றை நாளிலே நம் நாட்டு மொழிகள் வளர்ச்சியற்றிருக்கின்றன. ஆனால் நம் முன்னையோர் ஆராய்ச்சி இன்னதென அறியாதாரல்லர். முப்பது நாற்பது நூற்றாண்டுகளின் முன்பே தமிழ்மக்கள் ஆராய்ச்சி செய்யு முறைமையையும் அதன் பெருமையையும் நன்கறிந்திருக்கின்றனர். மிக்க தொன்மையுடையதாகிய தொல்காப்பியம் என்னும் நூலே தமிழின் வழக்கினும் செய்யுளினும் உள்ள எழுத்துச் சொற் பொருள்களை முற்ற ஆராய்ந்து முறைப்படுத்தியற்றப் பெற்றதன்றோ? தொல்காப்பியர் கூறியிருக்கும் நூலிலக்கணம் உரையிலக்கணமெல்லாம் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டனவேயாகும். அவர், உரையைக் காண்டிகை யென்றும், உரை (விருத்தி) யென்றும் இருவகைப்படுத்து வைத்து,

"சூத்திரத்துப் பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே"

என்றும்,

"மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென வொருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்"

என்றும் உரையிலக்கணங் கூறியிருப்பதனை உய்த்துணர வல்லார்க்கு இவ்வுண்மை புலனாகாநிற்கும். அவர் 'என்மனார் புலவர்' என்று கூறியிருப்பது அவருக்கு முன்னும் அது த

சிறந்து நின்றமையைக் காட்டுகிறது. ஒரு நூல் கற்றற்கண் மனவெழுச்சி யுண்டாதற்கே அந்நூலின் முகத்தே ஆராய்ச்சி யுரையொன்று அமையப்பெற வேண்டுமென முன்னையோர் கருதி யிருந்தன ரென்பது ஆக்கியோன் பெயர் முதலிய எட்டனையும் காலம் முதலிய மூன்றனையும் வாய்ப்பக்காட்டும் சிறப்புப் பாயிரத்தினை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருக்க வேண்டுமென அன்னார் வலியுறுத்தமையாற் போதருகின்றது. இங்கே காட்டிய வற்றிலிருந்து, பழைய நூல் உரைகளின் பொருளை யுணர்தற்கும், அவை ஒன்றோடொன்று முரணியவழி அவற்றின் மெய்ம்மை பொய்ம்மை தெளிதற்குமே யன்றி, புதிய நூல் உரைகள் வகுத்தற்கும் ஆராய்ச்சி இன்றியமையாத தென்பது பெறப்படுதல் காண்க. இங்ஙனமாகவும் தமிழ் கற்றாருள்ளே சிலர் முன்னோர் கூறிய அனைத்தையும் முழு உண்மைகளாகக் கொள்ள வேண்டுமென்றும், அவற்றை ஆராய்ந்து அவற்றிலுள்ள வழுக்களை யெடுத்துக்காட்டிக் களையலுறின் அது பெரியோரை இகழ்த லாகிய குற்றமாம் என்றும் கூறித் தமிழ் வளர்ச்சிக்கு இடர் விளைப்பாராகின்றனர். அன்றியும் அவர் அங்ஙனம் கூறுதலால் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கட்கு உரை வகுத்த முன்னோர் பலர், தமக்கு முற்பட்ட உரைகளை மறுத்துப் பெரியோரை யிகழ்ந்த குற்றத்திற் காளாயினரெனத் தாமே அப்பெரியோரை இகழ்ந்து குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வாராகின்றனர். இவர்கள் தம்மீது வைத்திருக்கும் அறிவுடன்கூடாத பற்றினை அப்பெரியோர்கள் அறிவரேல் மிக அருவருநிற்ப ரென்பது ஒருதலை.

இனி, ஆராய்ச்சி இன்றியமையாத தென்றது கொண்டு யாவருமே அது செய்தற் குரியரெனக் கொள்ளுதல் கூடாது. முறையான கல்வி சிறிதேனும் உடையாரன்றி எனையோர் ஆராய்ச்சிக்குரியரல்லர். அடிப்பட்ட கல்வி சிறிது மின்மையால் பழைய நூல் உரைகளின் பொருளுணரும் அறிவில்லாது, வைத்துத் தம்மைப் பிறர் ஆராய்ச்சி வல்லுநரென மதித்தல் கருதி அவையிற்றை ஆக்கியோர்மீது குற்றங்கூறித் திரிவாரும், அவரது கூற்றினைப் போற்றுவாரும் ஒரு நாட்டில் இருப்பின், அஃது



அந்நாட்டின் இழிந்த நிலைமைக்கு அடையாளமாகும். கல்வி யுடையாரும் தாம் கற்று வல்ல துறையிலே ஆராய்ச்சியை நடாத்துதலே தகுதியாகும். அவர் அங்ஙனம் ஆராயுங்காலும், விருப்பு வெறுப்பின்றி உண்மைப் பொருள் காணவேண்டு மென்னும் நோக்கத்துடன் தொடங்கினாலன்றி அது பயனுடைய தாகாது. இப்பண்புடன் ஆராய்ச்சியை மேற்கொண்டு பொருளுண்மை காண்போரே அறிவுடையோரென மதிக்கத்தக்காராவர்.

"காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றா கெடும்."

என்னும் ஆன்றோர் செய்யுள் ஆராய்ச்சி செய்வார்க்கு இருக்க வேண்டிய இன்றியமையாத பண்பினையும், அஃதில்வழிப் படும் இழுக்கினையும் நன்கு அறிவுறுத்துதல் காண்க. நூலாராய்ச்சி செய்வார் தாம் ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு அதற்கு முரணுயவழியெல்லாம் அந்நூற் பொருள்களைத் திரித்துக் கூறுதல் அடாத செயலாகும். கல்வி கேள்விகளாற் றிருந்திய மன முடையா ரொருவர் தம் நுண்ணறிவாற் பலகாலும் ஆராய்ந்து நலம் பயப்பதெனக் கொண்ட கொள்கையுடன் எனைச் சான்றோர் இயற்றிய நூற்பொருள் முரண்படுமாயின் அவர் அந்நூற் பகுதியையோ அன்றி அந்நூல் முழுதையுமோ தமக்கு உடன்பாடாகக் கொள்ளாது விடுத்தல் குற்றமாகாது. ஆனால், அந் நூலாசிரியர் கருத்துக்கு மாறுகத் தமது கொள்கையுடன் பொருந்த அதற்குப் பொருள் செய்தலே ஏதமாம். வாழ்க்கையின் நோக்கமே மெய்யுணர்வு கைவரப்பெறுதலாயிருக்க, அதற்கு நெறியான நூலாராய்தற்கண் பொய்யினைப் பயின்று வருவது எத்துணை அறியாமையாகும்!

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்னும் பொய்யில் புலவரின் மெய்யுரையைக் கற்றறிந்தா ரொருவர் அவர் வாய்மொழிகட்கே பொய்ப்பொருள் கூறிவரின்

அவரது பேதைமையை என்னென்றுரைப்பது! முதற்கண் பொய்யென அறிந்து வைத்தே ஒன்றனைக் கூறுவார் பின்பு அதனை நிலைநிறுத்தலே கருத்தாகச் சான்றுகள் தேடி முயலும் பொழுது நாளடைவில் அவ்வெண்ணம் உறைத்தலால் அதுவே மெய்யாக மாறித் தோன்றுதலும் உண்டு. அவர் நல்லாழ் இருந்து திருந்தினன்றி அவர்க்குப் பிறர் உண்மை புணர்த்துவ தென்பது இயல்வதொன்றன்று. எத்தகைய அறிவுடையார்க்கும் ஓரோவழி உண்மை தோன்றுது ஒன்று மற்றொன்றாகத் திரிந்து தோன்றுதல் நிகழக் கூடியதே. அத்திரிபுணர்ச்சியின் பயனாக அவர் தவறான கொள்கையொன்றை வெளிப்படுத்தலுங் கூடியதே. எனினும் அவர் தாமாகவோ அன்றியும் பிறரால் உணர்த்தப் பட்டோ தம் கொள்கை தவறென அறிந்த வழி அதனை விடுத்து உண்மையைக் கடைப்பிடித்தலே நெறியாகும். அவ்வாறன்றித் தாம் முதலிற் கொண்ட கொள்கையை மாற்றுதல் இழிவென்னும் மாண்பிறந்த மான முடையாராய் அதனையே நிறுத்துதற்கு முயல்வோர் தமக்கும் பிறர்க்கும் கேடு சூழும் தறுகணாளராவர். இத்தகைய தீமைகட் கெல்லாம் காரணம்

"வெண்மை யெனப்படுவ தியாதெனின் ஒண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு"

என வள்ளுவனார் கூறியாங்கு யாவரினும் தம்மையே அறிவுடையாரென மதித்துத் தருக்கும் புல்லறிவாண்மை யாகும்.

இனி, நூலாராய்ச்சி செய்வார்க்கு ஒவ்வொன்றினு முள்ள நலங்களைக் கண்டறிய வேண்டுமென்னும் ஆர்வமே மிகுந்திருக்க வேண்டும். கடலின் ஆழத்தேயுள்ள விலையுயர்ந்த மணிகள் போன்று நூலினுள்ளே அமைந்திருக்கும் அரிய கருத்துக்களும் உண்மைகளும் அவற்றை அறிய வேண்டு மென்னும் அவாவும் உழைப்பு முடையார்க்கே விளங்கித் தோன்றுவன; அல்லாதார்க்கு வெறுங் கூழாங்கல்லும் கிளிஞ்சிலும் போல்வனவே தோன்று நிற்கும். அவர் அவற்றையே பொருளெனக் கொண்டு அமைதலோ அன்றி அந்நூலினை எள்ளி நகையாடலோ செய்வர். ஆராய்ச்சி முறை குறித்து மற்றும் கூற வேண்டுவன பலவுள்ளன.



எனினும் இவ்வுரை விரிந்து செல்லாமை கருதி இன்னும் ஒன்று மட்டும் குறிப்பிட்டு நிறுத்துதும். முற்சொன்ன குற்றமொன்று மின்றி ஒருவர் நூலினை ஆராயும் வழியும் அந்நூல் தோன்றிய காலம் முதலியவற்றின் உணர்ச்சியில்வழி அவர் அந்நூற்பொருளை உள்ளவாறுணரும் வலியிலராகின்றனர். இக்காலத்தே நம்மவரிற் சிலர் ஒரு நூலின் பொருளை நோக்க வேண்டுமே யன்றி அது தோன்றிய காலத்தை நோக்க வேண்டுவதின் றென்கின்றனர். வேறு சிலர் நூல் தோன்றிய காலத்தை அதன் பெருமைக்கோ சிறுமைக்கோ காரணமாகக் கொண்டு விடுகின்றனர். இருவர் கொள்கையிலும் ஓரளவு உண்மையிருப்பினும், ஆழ்ந்து நோக்கின், பெருமை சிறுமைக்காக வன்றி நூலின் பொருளை உள்ளவாறுணர்தற் பொருட்டே அதன் காலத்தை வரையறுத்துணர்தல் வேண்டுமென்பதும், காலத்தை நோக்க வேண்டுவதின் றென்பது அறியாமையா மென்பதும் புலப்படும். திருக்குறள் முதற் பாவிலுள்ள ஆதி என்னும் சொல்லுக்கும், தொல்காப்பியத்தின் இரண்டாறு சூத்திரத்திலுள்ள 'ஆய்தம்' என்னுஞ் சொல்லுக்கும் சிலர் கூறிவரும் பொருள்கள் எவ்வளவு பொருத்தமானவை யென்பது காலவாராய்ச்சியாற் புடமிட்டறிவார்க்கே வெளிப்படும் என்பதனை இங்கே சான்றாகக் காட்டுதும்.

இனி, இங்ஙனம் பன்னூல்களையும் ஆராய்ந்தறிந்த புலமை யுடையார் தமக்கும் உலகிற்கும் பயனுண்டாக வாழு நெறியைப் பின்வருமாறு சுருக்கிக் கூறுதல் சாலும்.

க. தாம் அறிந்த பொருள்கள் தம் வாழ்விலே அல்லது அழுந்திய உணர்விலே ஒன்றுபட வொழுகுதல்.

உ. தாம் அரிதின் உணர்ந்த பொருள்களை ஏனையர் எளிதின் அறிந்து பயனெய்து மாறு உரைத்தலோ எழுதுதலோ செய்து போதால்.

ங. உலகத்தோடு பொருந்த வொழுகுதலாகிய மக்கட் பண்பினை யுடையாதல்.

ச. வாலறிவுடைய இறைவன் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குதல். (தொடரும்

உ

# முதலாங் குலோத்துங்க சோழன்.

(முற்றொடர்ச்சி துணர் 3, பக்கம் 57.)

திருவாளர், T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

## எட்டாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது சமயநிலை.

நம் குலோத்துங்கன் கொண்டொழுகியது பொதுவாக வைதிக சமயம் என்பது ‘முந்நூல் பெருமார்பிற் சிறந்தொளிரப் பிறப்பிரண்டா வதுபிறந்து சிறந்த பின்னர்’ ‘வேதங்கள் நான்கினையும் வேதியர்பாற் கேட்டருளி’ னான் என்று ஆசிரியர் சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியிற் கூறியிருத்தலால் நன்கு விளங்குகின்றது. ஆனால் இவன் வைதிக சமயத்தின் உட்பிரிவுகளாகிய சைவவைணவ சமயங்களுள் சைவசமயத்தையே சிறப்பாகக் கொண்டொழுகியவன்; சிவபெருமானிடத்து அளவு கடந்த பத்தி செலுத்தியவன். இவன் காலத்திற்கு முற்பட்ட சோழ மன்னர்கள் எல்லோரும் சைவராகவே இருந்திருப்பதோடு தில்லையில் எழுந்தருளியுள்ள திருச்சிற்றம்பல நாதரைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டும் வந்துள்ளனர். ஆதித்தன் முதற் பராந்தகன் முதலானோர் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்து அதனைச் சிறப்பித்திருக்கின்றனர். நம் குலோத்துங்கனும் தன்முன்னோரைப் போலவே திருச்சிற்றம்பலத் தெம்பெருமானைக் குலதெய்வமாகக்கொண்டு வழிபாடு புரிந்து வந்தான்.



ஆயினும், தாம் மேற்கொண்ட சமயமொழிய மற்றைச் சமயங்களைக் கைக்கொண்டொழுகும் தம் நாட்டுமக்களை வெறுத்துப் பல்லாற்றானும் துன்புறுத்தும் அரசர் சிலர் போல இம்மன்னர் பெருமான் புறச்சமயங்களில் சிறிதும் வெறுப்புக் காட்டியவன் அல்லன். இதற்குச் சில சான்றுகள் எடுத்துக் காட்டிச் சிறிது விளக்குவாம். சோழ இராச்சியத்திலுள்ள பல வைணவ, சமண பௌத்தக் கோயில்கள் தோறும் இவனது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தஞ்சாவூர் சில்லாவைச் சார்ந்த மன்னார்குடியிலுள்ளதும் இப்போது இராசகோபாலசாமி கோயில் என்று வழங்கப் பெறுவதுமாகிய திருமால் கோட்டம் இவன் பெயரால் எடுப்பிக்கப்பெற்ற தொன்றாம். ‘குலோத்துங்கசோழ விண்ணகரம்’ என்பது அதற்குரிய பழைய பெயர். அன்றியும், நாகப் பட்டினத்தின்கண் கடாரத்தரசனாகிய சூடாமணிவர்மனால் கட்டத் தொடங்கப் பெற்று அவனது மகனாகிய மாறவிசயோத்துங்கவர்மனால் முடிக்கப்பெற்ற இராசராசப்பெரும்பள்ளி என்னும் புத்த விகாரத்திற்கு நம் குலோத்துங்கன் விளைநிலங்களை நிபந்தமாக விட்டிருக்கின்றான். கி. பி. 1090-ல் இக்கோயிலுக்கு இவ்வேந்தன் விட்ட நிபந்தங்களை யுணர்த்தும் செப்பேடுகள் ‘ஹாலண்டு’ தேயத்திலுள்ள ‘லெய்டன்’ நகரத்துப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டிருத்தலை இன்றுங் காணலாம். இத்தகைய செய்திகளை யாராய்ந்து உண்மைகாணுமிடத்து, இவன் தன் காலத்து வழங்கிய எல்லாச்சமயங்களிடத்தும் பொது நோக்குடையவனாய் அவற்றை அன்புடன் ஆதரித்து வந்தவன் என்பது இனிது பெறப்படுகின்றது. ஆயினும், இவன் சிவபிரானிடத்து ஆழ்ந்த பத்தியுடையவனாய்ப் பெரிதும் ஈடுபட்டிருந்தான் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். இவன் எய்தியிருந்த திருநீற்றுச்சோழன் என்ற அருமைத் திருப்பெயரொன்றே இதனை நன்கு வலியுறுத்தும். அன்றியும், சேக்கிழார் பெருமானைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் பாடுவித்து உலகிற் குதவியவன் இவ்வரசர் பெருந்தகையே யாவன். ஒருவன் தன் சமயத்திற்குச் செய்யக் கூடிய திருத்தொண்டுகளுள் இதனினும் சிறந்தது வேறு யாதுளது? ஆகவே இவனைச் சிறந்த சைவர்தலைமணி என்று கூறுதல் எவ்வாற்றானும் பொருத்த முடையதே யாகும்.

# ஒன்பதாம் அதிகாரம்.

---

## குலோத்துங்கனது குணச் சிறப்பு.

நம் குலோத்துங்கன் ஒரு செங்கோல் வேந்தனுக்குரிய எல்லா நற்குணங்களையும் ஒருங்கே படைத்தவன். இவன்பாற் காணப்படும் உயர்குணம் பலவுள் முதலாவதாக வைத்துப் பாராட்டத்தக்கது இவனது கடவுள் பத்தியே யாகும். சிறப்பாகச் சிவபெருமானிடத்து இவன் ஒப்பற்ற பத்தியுடைவனாய் ஒழுகிவந்தவன் என்பது முன்னர் விளக்கப்பட்டது. அன்றியும், தன் தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்தினின்று புறப்பட்டுக் காஞ்சிமா நகரை நோக்கிச் செல்பவன் தில்லையம்பதிக்குப் போய்ப் பொன்னம்பலத்திலே நடம்புரியும் முக்கட்பெருமானை வணங்கி, அவரது இன்னருள் கொண்டு வடதிசை எகினான் என்று கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் கூறியிருப்பது இவனது சிவபத்தியின் மாண்பை இனிது விளக்குகின்றது.

இனி, அடுத்துப் புகழ்தற்குரியதாய் இவனிடத்து அமைந்திருந்த சிறந்த குணம் இவனது வீரத்தன்மையேயாம். இவன் இத்தமிழகம் முழுமையும் இதற்கப்பாலுள்ள கங்கம், கலிங்கம், கொண்கானம், சிங்களம், கடாரம் முதலான பிற நாடுகளையும் தன்னடிப்படுத்திப் புகழுடன் ஆண்டுவந்த பெருவீரன் என்பதை முன்னரே கூறியுள்ளோம். ஆகவே, இவனை இப்பரதகண்டத்தின் பெரும் பாகத்திலும் இதனைச் சூழ்ந்துள்ள பிறவிடங்களிலும் தன் வெற்றிப் புகழைப் பரப்பிய வீரர்தலைமணி என்றுரைத்தல் சிறிதும் மிகைபடக் கூறியதாகாது. இவனது படைத்தலைவர்களும் அமைச்சர்களும் இவனைப் போலவே வீரத்தன்மை வாய்ந்தவர்களாய் இவனுக்கு உசாத்துணையாய் அமர்ந்து இவனது வென்றிமேம்பாடு யாண்டும் பரவுதற்குக் காரணமாயிருந்தனர் என்பது ஈண்டு அறியத்தக்கது. அன்னோருள் சிலரது வரலாற்றை மற்றோர் அதிகாரத்திற் காணலாம்.



இவன் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்த வேந்தன் ஆவான். சங்கத்துச் சான்றோர் நூல்களையும் பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலாய நூற்களையும் நன்கு பயின்றிருந்தான். ஆசிரியர் சயங்கொண்டாரும் இவனைப் பண்டித சோழன் என்று கலிங்கத்துப்பரணியில் ஓரிடத்தில் குறித்துள்ளார். இவன் புலவர்களது கல்வித்திறத்தை அளந்து காண்டற்குரிய பேரறிவு படைத்தவனாயிருந்தமையின் அன்னாரிடத்துப் பெருமதிப்பும் அன்பும் வைத்திருந்தான். அன்றியும் அவர்கட்கு வேண்டியன அளித்துப் போற்றியும் வந்தான். எனவே இம்மன்னன் புலவர்களைப் புரந்துவந்த பெருங்கொடை வள்ளல் ஆவன். இவன், 'கலையினொடுங் கவிவாணர் கவியினொடும் இசையினொடும்' பொழுதுபோக்கி வந்தனன் என்பர் கவிச்சக்கிரவர்த்தியாகிய சயங்கொண்டார். இவன், செந்தமிழ்ப் புலமையுடையவனாயிருந்தமையோடு வடமொழிப் பயிற்சியும் பெற்றிருந்தான். அன்றியும், இவன் வேங்கி நாட்டில் ஆட்சிபுரிந்தபோது அந்நாட்டு மொழியாகிய தெலுங்கே அரசாங்க மொழியாக அமைந்திருந்தது. வேங்கி நாட்டிலுள்ள இவனது கல்வெட்டுக்களும் தெலுங்கு மொழியில் காணப்படுகின்றன. எனவே, இவன் தெலுங்கு மொழியைக் கற்றவனாதல் வேண்டும். ஆகவே, தமிழ், ஆரியம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் இவ்வேந்தன் நல்ல பயிற்சியுடையனாயிருந்தனன் என்பது நன்கு புலப்படுகின்றது.

நம் வளவர்பெருமான் நூலறிவு எய்தியிருந்ததோடு இயற்கையில் நுண்ணறிவும் அமையப்பெற்றிருந்தான்; நல்லறிஞர்களோடு அளவளாவி அறியவேண்டியவற்றை நன்கறிந்து பேரறிஞனாய் விளங்கினான். ஆசிரியர் சயங்கொண்டார் இவனை 'அறிஞர் தம்பிரான் அபயன்' என்று கலிங்கத்துப்பரணியில் கூறியிருத்தலும் இச்செய்தியை இனிது வலியுறுத்தும்.

இனி, இவ்வேந்தனது செங்கோற் பெருமையும் பெரிதும் மதிக்கத்தக்கதாகும். இவன் 'குடியுயரக் கோல்உயரும்' என்பதை நன்குணர்ந்தவனாதலின் தன் நாட்டிலுள்ள குடிகள் எல்லோரும் வளம் பெறுதற் கேற்ற செயல்களைச்செய்து அவர்களது

போன்பிற்குரியவன் ஆயினன். இவன், தன் குடிமக்கள் பண்டைக் காலமுதல் அரசர்க்குச் செலுத்திவந்த தலைவரியாகிய சுங்கத்தைத் தவிர்த்து, அவர்களது வாழ்த்திற்கும் புகழுரைக்கும் உரிமைபூண்டு விளங்கிய செய்தி முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இவனது செங்கோற் சிறப்பை 'அபயன் இமயம் திரித்த கோலி லொர் வளைவுண்டு—நீதிபுனை செய்ய கோலிலொர் வளைவில்லையே' என்று பாராட்டிக் கூறியுள்ளனர் புலவர் பெருமானாகிய சயங்கொண்டாரும்.

இவன் பெரியோர் கூறும் நன்மொழிகளைக் கேட்டு நல்வழியில் ஒழுகும் இயல்பினன்; ஆசிரியர் சேக்கிழார் சமண நூற் பயிற்சி தீதுவிளைக்கும் என்று இவனுக்கு அறிவுறுத்தியபோது இவன் சிந்தாமணிப் பயிற்சியை யொழித்து, அப்பெரியாரைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் பாடுவித்து அந்நூலைப் போற்றிப் படித்தின்புற்று வந்தமையால் இதனை நன்குணரலாம்.

அன்றியும், இவன் அஞ்சாமை, ஈகை, ஊக்கம், சுற்றந்தழுவுதல், காலமறிந்து கருமமுடிக்கும் ஆற்றல் முதலான அருங்குணங்கள் படைத்த பெருந்திறல் வேந்தனாய் அந்நாளில் நிலவினான். சுருங்கவுரைக்குமிடத்து, இம்மன்னர் பெருமான், தன்னடிவந்து பொருந்தினோர் எவரேயாயினும் தண்ணளி சுரந்து அவர்களை வாழ்விக்கும் வண்மையும் எதிர்த்தோர் கூற்று வெகுண்டன்ன ஆற்றலுடையவராயினும் அன்னோரைப் போரிற் புறங்காணும் வீரமும் உடையவனாய் விளங்கிய பெருந்தகையாவன் என்று கூறி இவ்வதிகாரத்தை ஒருவாற்றான் முடிக்கலாம்.

---

## பத்தாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது மனைவியரும் மக்களும்.

குலோத்துங்கனது பட்டத்தரசியாக விளங்கியவள் மதுராந்தகி என்பாள். இவளே இவ்வேந்தனது முதல்மனைவி. இவளுக்குத் தீனசிந்தாமணி என்ற பெயரும் உண்டு. இவ்வரசி இவனது



அம்மானாகிய விசயாலயேந்திர சோழனது மகள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவனுக்கு வேறு இரு மனைவியரும் இருந்தனர். அவர்கள் ஏழிசைவல்லபி, தியாகவல்லி என்ற இருவருமேயாவர். பட்டத்தரசியாகிய மதுராந்தகி என்பாள் குலோத்துங்கனது ஆட்சியின் இருபதாம் ஆண்டின் முன்னர் இறந்து விட்டனள். பின்னர், இவனது மூன்றாம் மனைவியாகிய தியாகவல்லி என்பவள் பட்டத்தரசியாயினள். இவளே இவ்வரசனது ஆட்சியின் பிற்பகுதிமுழுமையும் பட்டத்தரசியாகவிருந்து வாழும்பேற்றை எய்தியவள். இரண்டாம் மனைவியாகிய ஏழிசைவல்லபி அரசனுக்கு என்றும் இரண்டாம் மனைவியாகவே இருந்து வாழ்ந்து வந்தனள். இவளை 'ஏழிசை வளர்க்கவுரியாள்' என்று ஆசிரியர் சயங்கொண்டார் கூறுதலால் இவள் ஏழிசையிலும் புலமையுற்றிருந்தனள் என்பது புலப்படுகின்றது.

இனி, பொன்னின்மாலை மலர்மாலை பணிமாறியுடனே புவனி காவலர்கள் தேவியர்கள் சூழ்புடைவரச், சென்னி யாணையுடனாணையை நடத்து முரிமைத் தியாகவல்லி நிறை செல்வி மல்கி வரவே' என்னுங் கலிங்கத்துப்பரணிப் பாடலால் பட்டத்தரசியாகிய தியாகவல்லியின் பெருமையும் அரசன் அவள்பால் வைத்திருந்த மதிப்பும் நன்கு விளங்கும். இவள், 'சிவனிடத்துமையெனத் தியாகவல்லி—உலகமுழுதுடையாள்' என்று நம் குலோத்துங்கனது மெய்க்கீர்த்தியிலும் புகழப்பட்டுள்ளாள்.

இனி, நம் குலோத்துங்கனது மனைவியருள் பட்டத்தரசியாக விளங்கியவளைப் புவனமுழுதுடையாள் அல்லது அவனிமுழுதுடையாள் என்றும், மற்றையோரை ஏழுலகுமுடையாள், திரிபுவனமுடையாள், உலகுடையாள் என்றும் அக்காலத்தில் வழங்கி வந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. அவர்களது இயற் பெயர்களோடு இப்பெயர்களையும் சேர்த்துச் சிறப்பிப்பது அந்நாளில் பெருவழக்காயிருந்தது. இவ்வுண்மையை அக்காலத்துக் கல்வெட்டுக்களைக் கொண்டறியலாம்.

மதுராந்தகி என்பாள் பட்டத்தரசியாக நிலவிய நாட்களில் புவனிமுழுதுடையாள் என்றும் அவனிமுழுதுடையாள் என்ற

வழங்கப்பெற்றனள். அப்போது இரண்டாம் மனைவியாகிய ஏழிசைவல்லபி ஏழுலகுமுடையாள் என்ற சிறப்புப் பெயர் எய்தியிருந்தாள். மூன்றும் மனைவியாகிய தியாகவல்லி உலகுடையாள் என்று வழங்கப்பட்டனள். மதுராந்தகி வானுலகடைந்தபின்னர், தியாகவல்லி பட்டத்தரசியாயினள் என்று முன்னரேகூறியுள்ளேம். அவள் அந்நிலையை எய்தியவுடன் அக்கால வழக்கம்போல் புவனி முழுதுடையாள் என்ற சிறப்புப்பெயரைப் பெற்றனள். இரண்டாம் மனைவியாகிய ஏழிசைவல்லபி வேறுபாடின்றி அந்நிலையிலேயிருந்தமையின் என்றும் ஏழுலகு முடையாளாகவே விளங்கினள்.

நம் குலோத்துங்கனது முதல் மனைவியாகிய மதுராந்தகிக்கு மக்கள் எழுவர் இருந்தனர். அவர்களுள் முதல் மகன் விக்கிரம சோழன் எனப்படுவான். இரண்டாம் மகன் இராசராசன் என்னும் பெயரினன்; மூன்றும் மகன் வீரசோழன் என்பான்; மற்றைப் புதல்வர்களது பெயர்கள் இக்காலத்துப் புலப்படவில்லை. அன்றியும் அம்மங்கைதேவி என்ற ஒருமகளும் இருந்தனள். இவர்களுள் முதல்வனாகிய விக்கிரமசோழன் கி. பி. 1108-ஆம் ஆண்டில் சோழமண்டலத்திற்கு இளவரசுப்பட்டங் கட்டப்பெற்றுத் தன் தந்தையிடம் அரசியல் நுட்பங்களைக்கற்று வந்தான். இவன், தென்கலிங்க மன்னாகிய தெலுங்கவீமன்மேல் ஒருமுறை படையெடுத்துச் சென்று அவனைப் போரிற் புறங்கண்டு வெற்றித் திருவுடன் திரும்பினான். கி. பி. 1120-ல் நம் குலோத்துங்கன் விண்ணுலகெய்தியபின்னர் அரியணை யேறிச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டு ஆட்சி புரிந்தவன் இவ்விக்கிரம சோழனே யாவான். இவனுக்குத் தியாக சமுத்திரம் அகளங்கன் முதலான வேறு பெயர்களும் உண்டு. புலவர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர் இவ்வேந்தன்மீது 'விக்கிரமசோழனுலா' என்ற ஓர் உலாப்பாடியுள்ளனர். இம்மன்னன் இப்புலவர் பெருந்தகையைப் பெரிதும் பாராட்டி ஆதரித்து வந்தான்.

இரண்டாம் மகனாகிய இரண்டாம் இராசராசன் என்பான் கி. பி. 1077 முதல் 1078 வரை ஓராண்டு வேங்கி நாட்டில் அரசப்பிரதிநிதியாயமர்ந்து அதனை அரசாண்டனன்; பின்னர், தன்



தந்தையிடத்தமர்ந்து அணுக்கத் தொண்டுகள் புரிதல் வேண்டுமெனச் சோழமண்டலத்திற்குத் திரும்பிவந்து விட்டான். மூன்றும் மகனாகிய வீரசோழன் என்பவன் தன் தமையனாகிய இரண்டாம் இராசராசனுக்குப் பின்னர் வேங்கி நாட்டிற்கு அரசப் பிரதிநிதியாக அமர்ந்தான். அங்கு அவனது ஆட்சி பல ஆண்டுகள் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

குலோத்துங்கனது மற்றை மக்களைப்பற்றிய வரலாறு இப்போது புலப்படவில்லை.

## குலோத்துங்கனது சுற்றத்தினர்.

| | | |
|---|---|---|
| 1. | தந்தையைப்பெற்ற பாட்டன் | விமலாதித்தன். |
| 2. | தந்தையைப்பெற்ற பாட்டி | குந்தவ்வை II. |
| 3. | தந்தை | கீழைச்சளுக்கியனாகிய இராசராச நரேந்திரன். |
| 4. | தாய் | அம்மங்கைதேவி I. |
| 5. | உடன் பிறந்தாள் | குந்தவ்வை III. |
| 6. | மனைவியர் | மதுராந்தகி, ஏழிசைவல்லபி, தியாகவல்லி. |
| 7. | மக்கள் | விக்கிரமசோழன், இராசராசன் II. வீரசோழன், அம்மங்கைதேவி II. |
| 8. | சிறிய தாதை | விசயாதித்தன் VII. |
| 9. | தாயைப்பெற்ற பாட்டன் | கங்கைகொண்டசோழன் அல்லது இராசேந்திர சோழன் I. |
| 10. | அம்மான்மார் | இராசாதிராசன் I, விசயராசேந்திரசோழன், மும்முடிச்சோழன், வீரராசேந்திரசோழன். |
| 11. | அம்மான்சேய் | அதிராசேந்திரன். |
| 12. | முதல் மனைவியின் தந்தை | விசய ராசேந்திரன். |

## பதினொன்றாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது அரசியல் தலைவர்கள்.

குலோத்துங்கனது ஆளுகையில் அமைச்சர்களாகவும் படைத்தலைவர்களாகவும் திருமந்திர ஓலைநாயகமாகவும் திருமந்திர ஓலையாகவும் திருவாய்க் கேள்வியாகவும் புரவுவரித் திணைக்களத்தினராகவும் அமர்ந்து அரசாங்கத்தை இனிது நடத்திய அரசியல் அதிகாரிகள் எத்துணையோ பலர் ஆவர். அவர்களுட் சிலரது பெயர்கள் மாத்திரம் கல்வெட்டுக்களால் தெரிகின்றன. அன்னோருள் மூவரது வரலாற்றைச் சிறிது விளக்குதற்குரிய கருவிகள் கிடைத்துள்ளமையின் அவர்களைப்பற்றிய செய்திகளும் ஈண்டுச் சுருக்கமாக எழுதப்படுகின்றன.

1. கருணாகரத் தொண்டைமான்:—இவனது வரலாற்றைக் கலிங்கத்துப்பரணி ஒன்றே சிறிது கூறுகின்றது. அந்நூல் ஒன்றிலதேல் தமிழகத்தில் அக்காலத்தே பெருவீரனாய்ப் பெரும்புகழ் படைத்து விளங்கிய இக்குறுநில மன்னனது பெயரே பின்னுள்ளோர் தெரிந்து கொள்ளாதவாறு மறைந்தொழிந்திருக்கும் என்பது திண்ணம். இவன் பல்லவர் குலத்தில் தோன்றிய ஒரு சிற்றரசன். இவன், நுண்ணறிவிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்தவனாயிருந்தமையின் நம் குலோத்துங்கனது அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாக முதலில் அமர்த்தப்பட்டான். பின்னர், தன் சீரிய ஆற்றலாற் படிப்படியாக உயர்நிலையை எய்தி இறுதியில் வேந்தனது அமைச்சர் தலைவனாகவும் படைத்தலைவர்களுள் முதல்வனாகவும் ஆயினான். இவனே, 'வடகலிங்கப்போர்க்குத் தலைமைப் படைத்தலைவனாகச் சென்று, போர் நடத்தித் தன் அரசனாகிய குலோத்துங்க சோழற்கு வாகைமாலை சூட்டியவன். குலோத்துங்கன் எய்திய பெரும்புகழுக்குச் சிறந்த காரணமாயிருந்தோருள் இவன் முதன்மையானவன் என்று சிறிதும் ஐயமின்றிக் கூறலாம். கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டாரும், இவனை 'வண்டையர் அரசன் அரசர்கள் நாதன் மந்திரி—உலகு



புகழ் கருணாகரன்' எனவும் 'கலிங்கப்பரணி நம் காவலனைச் சூட்டிய தோன்றல்' எனவும் புகழ்ந்துள்ளார். இவனது அரிய அரசியல் ஊழியத்தைப் பெரிதும் பாராட்டி அதற்குரிய அறிகுறியாக 'வேள்' 'தொண்டைமான்' ஆகிய பட்டங்கள் குலோத்துங்க சோழனால் இவனுக்கு வழங்கப்பட்டன. இவன், இத்தகைய சிறப்பினை எய்திக் குலோத்துங்கனது அரசியலைப் பெருமையுறச் செய்தது இவ்வேந்தனது ஆட்சியின் பிற்பகுதியிலேயாகும். இவன், குலோத்துங்கனது மகனாகிய விக்கிரம சோழனது ஆளுகையிலும் இருந்துள்ளான் என்பது விக்கிரம சோழனுலாவினால் அறியப்படுகின்றது. இவன் வாழ்ந்த ஊர் வண்டை என்பர் ஆசிரியர் சயங்கொண்டார். அவ்வூர், சோழமண்டலத்தில் குலோத்துங்க வளநாட்டைச் சார்ந்த திருநறையூர் நாட்டிலுள்ள வண்டாழஞ் சேரியாகும் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. அஃது இப்போது வண்டுவாஞ்சேரி என்ற பெயரோடு தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணம் தாலூகாவிலுள்ள நாச்சியார் கோயிலிலிருந்து குடவாசலுக்குச் செல்லும் பெருவழியிலுள்ளது. வண்டாழஞ்சேரி என்பது வண்டுவாஞ்சேரி என்று பிற்காலத்தில் மருவி வழங்கி வருகின்றது.

இவன், சிவபெருமானிடத்தில் அளப்பரிய பேரன்புடையவனாய்த் திருவாரூரில் அரிய திருப்பணிகள் செய்துள்ளான். இவன் இறுதியில் திருவாரூரில் தியாகேசரது திருவடிகளிற் கலந்தனன் என்றும் தியாகேசரது திருப்பெயர்களுள் கருணாகரத் தொண்டைமான் என்பதும் ஒன்று என்றும் திருவாரூர் உலாக் கூறுகின்றது. இதனால், இவன் அப்பெருமானிடத்துக் கொண்டிருந்த அன்பின் முதிர்ச்சி ஒருவாறு விளங்கும்.

2. அரையன் மதுராந்தகனான குலோத்துங்கசோழ கேரளராசன்:— இவன் சோழமண்டலத்தில் மண்ணி நாட்டிலுள்ள முழையூரின் தலைவன்; குலோத்துங்கசோழனது படைத்தலைவர்களுள் ஒருவன். அரசனால் கொடுக்கப்பெற்ற குலோத்துங்க சோழ கேரளராசன் என்ற பட்டம் எய்தியவன்; குலோத்துங்கன் சேரர்களோடு நடத்திய போர்க்குப் படைத்தலைமை வகித்து

சென்று அதில் வெற்றிபெற்றவன்; இவ்வேந்தனால் சேரமண்டலத்தில் கோட்டாற்றில் நிறுவப்பெற்ற நிலைப்படைக்குத் தலைவனாயிருந்தவன். இவன் கோட்டாற்றில் தங்கிய நாட்களில் அங்கு 'இராசேந்திர சோழேச்சரம்' என்ற கோயில் எடுப்பித்துள்ளான். அதற்கு நிபந்தங்களுக்காகத் தேவதான இறையிலியும் குலோத்துங்க சோழனால் விடப்பட்டுள்ளது. இதனால், இவன் சிவபெருமானிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவனாய் இருந்தனன் என்பது நன்கு விளங்குகின்றது.

3. மணவிற் கூத்தனான காலிங்கராயன் :—இவன் தொண்டை மண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய மணவிற்கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவன்; குலோத்துங்கனது ஆட்சியின் முற்பகுதியில் படைத்தலைவனாயமர்ந்து பெரும்புகழ் எய்தியவன்; குலோத்துங்கன் வேணாடு, மலைநாடு, பாண்டி நாடு, வடநாடு முதலியவற்றோடு நிகழ்த்திய போர்களில் படைத் தலைமைவகித்து வெற்றியுற்று, அதனால் தன் அரசனுக்கு என்றும் நிலைபெறத்தக்க புகழை யுண்டுபண்ணியவன். இவனது போர் வன்மையையும் பெருமையையும் நன்குணர்ந்த குலோத்துங்கன் இவனுக்குக் 'காலிங்கராயன்' என்ற பட்டம் அளித்தான்.

இவன், தில்லையம்பலத்தில் நடம்புரியும் இறைவனிடத்துப் பேரன்பு பூண்டொழுகி, ஆண்டு இயற்றிய திருப்பணிகள் பல; அவற்றுள் தில்லையம்பலம் பொன்வேய்ந்தமையும், அங்கு நூற்றுக்கால் மண்டபம், பெரிய திருச்சுற்றுமாளிகை, தேவாரம் ஓதுதற்குரிய மண்டபம், சிவகாமகோட்டம் முதலியவற்றைக் கட்டுவித்தமையும் சிறந்தனவாம். அன்றியும் இவன் தியாகவல்லி முதலான ஊர்களைப் பொன்னம்பலவாணருக்குத் தேவதான இறையிலியாக விட்டிருக்கின்றனன். சமயகுரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு அடிகளை ஆட்கொண்டருளிய திருவதிகை வீரட்டானேச்சுரர் திருக்கோயிலில் இவன் செய்துள்ள அருந்தொண்டுகள் அளவிறந்தன. அங்குக் காமகோட்டம் எடுப்பித்தும், பொன் வேய்ந்தும், ஆடரங்கும் வேள்விச்சாலையும் அமைப்பித்தும், தேவதான இறையிலிவிடுத்தும் செய்த அருந்தொண்டுகள் அளவிறந்தன என்பர்.



இவற்றால் இவனது சிவபத்தியின் மாட்சி இத்தகையதென்று நன்கு புலப்படுகின்றதன்றோ? இனி, இவன் சைவசமயத்திற்குப் புரிந்துள்ள அரும்பணிகளுட் சிறந்தது மூவர் அருளிய தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லையம்பதியிற் சேமித்து வைத்தமையே யாகும். இவன் இவ்வாறு ஆற்றிய அரும் பெருந் தொண்டுகளை விளக்கக்கூடிய பல வெண்பாக்கள் தில்லையம்பதியிலும் திருவதிகை வீரட்டத்திலும் உள்ள கோயில்களில் வெட்டப் பட்டுள்ளன.

இவன், விக்கிரமசோழன் ஆட்சியிலும் இத்தகைய உயர்நிலையிலே இருந்தனன் என்பது விக்கிரமசோழன் உலாவடிகளாலும் புலனாகின்றது.

---

## பன்னிரண்டாவது அதிகாரம்.

---

### குலோத்துங்கன் காலத்துப்புலவர்.

குலோத்துங்கன் காலத்துச் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்கள், திருத்தொண்டர் புராணமியற்றிய சேக்கிழார் குரிசிலும் கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டாருமே யாவர். இவர்களது வரலாற்றை அடியிற் சுருக்கி வரைவாம்.

### சேக்கிழார்.

சேக்கிழார், தொண்டை மண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்தில், குன்றைவளநாட்டின்கணுள்ள குன்றத்தூரில், சேக்கிழார் குடியில் தோன்றியவராவார். இவருடைய பெற்றோர்கள் இவர்க்கிட்டு அழைத்த பெயர் 'அருண்மொழித் தேவர்' என்பது. இவர் சிவபத்தியும் நுண்ணறிவும் சொல்வன்மையும் இயல்பாகவே வாய்க்கப்பெற்றவர். பின்னர், பன்னூல்களையும் ஓதியுணர்ந்து தமக்கு ஒப்பாருமிக்காருமின்றித் திகழ்ந்தனர். சேக்கிழார்குடி

இவரது பரந்தகல்வியறிவு சிறந்த ஒழுக்கம் முதலியவற்றால் சால விளக்கமுற்றமையின், இவரை அறிஞர்களெல்லாம் 'சேக்கிழார்' என்றே அழைப்பாராயினர். இவரது பெருமையை நன்கு கேள்வியுற்ற முதற்குலோத்துங்க சோழன் இவரையழைப்பித்துத் தன் முதன்மந்திரியாக்கி, இவர்க்கு 'உத்தமசோழப்பல்லவன்' என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தனன். இவர் குலோத்துங்கன்பால் அமைச்சுரிமை எய்தியமைபற்றி ஒரு கதை கூறுவர். அஃது அடியில் வருவது.

ஆனித்திருவிழா ஒன்றில் பொன்னம்பலவாணரைத் தரிசிக்குமாறு தமிழ்வேந்தராய சேர சோழ பாண்டியர் மூவரும் சிதம்பரத்திற்குச் சென்றனர். தொண்டை நாட்டரசரும் அவண் எய்தினர். இந்நான்கு மன்னரும் கூடியிருக்கும் அவைக்களத்தே புலவர் ஒருவர் போந்து, ஔவையார் பாடியுள்ள,

'வேழ முடைத்து மலைநாடு மேதக்கச்
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து'

என்ற செய்யுளை யாவரும் கேட்க இனிது எடுத்துரைத்தார். இதனைச் செவியுற்ற சேரசோழ பாண்டியர் மூவரும் எங்கள் நாட்டிற் சான்றோரிலரோ? தொண்டைநாடு சான்றோருடைத்தென்று கூறியவாறென்னை? என்று அவரைக்கேட்டு, தொண்டை நாட்டு மன்னனை நோக்கி 'நுமது நாட்டிற் சான்றோருளரென்பதை எங்கட்குக் கண்கூடாகக் காட்டல் கூடுமோ?' என்று வினவினர் அதற்கு அவ்வேந்தன் 'நீவிர் சான்றோரிருத்தலைத் தக்க வழி கொண்டு அறிதலே தகுதியுடைத்து' என்றனன்.

பின்னர், 'ஒருவரது கல்வியறிவையும் மதிநுட்பத்தையும் தக்கவாறு அளந்து காண்டலே அவரைச் சான்றோரென மதித்தற்கு ஏற்ற வழியாகு'மென்பதை யாவரும் உளங்கொண்டு உடன்பட்டு 'பூமியிற் பெரிது யாது? கடலிற் பெரிது யாது? மலையிற் பெரிது யாது'? என்ற மூன்று வினாக்களையும் எழுதி



'இவற்றிற்கு விடை இறுப்போரே சான்றோராவர்' என்றுறுதி கொண்டு அவற்றை யாண்டும் அனுப்புவாராயினர். பலர் பெற்றும் விடை எழுதவில்லை. அவற்றைப் பெற்ற சேக்கிழார் அடியிற் குறித்துள்ள மூன்று திருக்குறட் பாக்களையும் அவ்வினாக்கள் மூன்றிற்கும் விடையாக எழுதியனுப்பினர். அவை—

1. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.
2. பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.
3. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினும் மாணப் பெரிது. என்பனவாம்.

இவ்விடையினைப் பெற்ற மன்னர்கள் வியப்படைந்து சேக்கிழாரது மதிநுட்பத்தையும் விரிந்த கல்வியறிவையும் பெரிதும் பாராட்டித் 'தொண்டைநாடு சான்றோருடைத்தெனக் கூறப் பெற்றிருத்தல் முற்றிலும் உண்மையே யாகு'மென்றுரைத்து மகிழ்ந்தனர். அம்மன்னர்களுள் ஒருவனாய முதற் குலோத்துங்கன் இவரை அழைப்பித்து அமைச்சுரிமையளித்துச் சிறப்பித்தனன் என்பர்.

இனி மேற்கூறிய கதையில் பல ஐயங்களும் வினாக்களும் எழுகின்றனவாதலின் அதனை மெய்ம்மையானது எனக் கொள்வதற்குத்தக்க வலிமையில்லை. ஆதலின், அஃது எவ்வாறாயினும் ஆகுக. ஆயினும் முதற் குலோத்துங்க சோழன் இவர்க்கு மந்திரத்தலைமை அளித்தது, இவர் நூலறிவாலும் நுண்ணறிவாலும் அடைந்திருந்த பெருமை நோக்கியே யாகுமெனக் கொள்வதிற் றடையாதுளது? இது நிற்க. சேக்கிழார் தம் தொழிலில் மிகச்சிறப்புற்று விளங்கினார். அரசனும் இவர்பால் அன்பு பூண்டொழுகுவானாயினன். அமைச்சர் பெருமானார் சோணாட்டகத்துள்ள திருநாகேச்சரத்தின்பாற் பேரன்புடையராய் இருந்தமையின், தம் குன்றத்தூரின்கண் ஒரு கோயில் எடுப்பித்து, அதற்கும் திருநாகேச்சரமெனப் பெயரிட்டு முறைப்படி வழிபாடு செய்துவந்தனர்.

இஃதிங்ஙனமாக, வளவர்கோமான் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சீவகசிந்தாமணியின்பால், அதன் சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றாற் பெரிதும் ஈடுபட்டு, படித்து இன்புறுவானாயினான். இதனைக்கண்ட சேக்கிழார், அந்நூல் தமிழ்நலம் நன்கு வாய்க்கப்பெற்றதேனும், மறுமைக்குப் பயன் படாததோர் சைன காவியமாக இருத்தலின் அந்நூற்பயிற்சியை அறவொழிக்குமாறு அரசற்கு அறிவுறுத்தக் காலங் கருதியிருந்தனர். ஒருநாள், அரசனை நோக்கி, 'வேந்தர் வேந்தே! சிந்தாமணி என்பது சமணரது பொய்ந்நூல்; சொற்பொருள் நலங்களாற் சிறப்புற்றிருப்பினும் இம்மைக்கும் அது பயன் படாததாகும்; இம்மை மறுமை நலங்களைப் பயப்பது சிவகதையேயாம்' என்றனர். இதனைச் செவியேற்ற அரசன், 'அமைச்சரேறே! இது பயனற்ற கதையாயின் இருமையும் பயக்கத்தக்க சிவகதையாது? அதன் வரலாற்றை எனக்கு நன்கு நவில்க' என்றனன். உடனே சேக்கிழார், 'அரசே! ஆரூரிறைவன் அடியெடுத்தருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'திருத்தொண்டத்தொகை' என்னும் பதினொரு பாடல்களடங்கிய பதிகமொன்று பாடியுள்ளார். அதன் பொருளை நம்பியாண்டார் நம்பி என்பவர் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார்பால் நன்கு உணர்ந்து, 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்னும் நூல் இயற்றியுள்ளனர்; அதனை, முதல் இராசராச சோழதேவர் முதலாய அறிஞரெல்லாம் படித்தின்புற்றனர்; அஃதே இருமையும் பயக்கும் சிவகதையாம்.' என, குலோத்துங்கன் அதனைத் தனக்குணர்த்துமாறு ஆர்வமுடன் வேண்டினன். அங்ஙனமே, சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றைச் சுருக்கியுரைத்தனர். அரசன் அதனைக் கேட்டு அகமகிழ்ந்து, அமைச்சர்க்குப் பெரும் பொருளளித்து, அதனைப் பெருங்காப்பியமாகப்பாடி உலகிற்கு உபகரிக்குமாறு வேண்டினன். சேக்கிழார் அதற்கிசைந்து, தில்லையம்பதியடைந்து இறைவன் திருவருள்பெற்று அப்பெருமான் அருளிய 'உலகெலாம்' என்ற சொற்றொடரையே முதலாக்கொண்டு, 'திருத்தொண்டர் புராணம்' என்ற நூலைச் சிலநாட்களிற் பாடி முடித்தனர். பின்னர், அதனை அப்பெருமான் திருமுன்னர் கவியரசர் புவியரசர் முதலானோர் வீற்றிருந்த பேரவையில் அரங்கேற்றினர். அரசன் அதனை இருசெவிக்கமுதெனக் கேட்டு இன்புற்று, அந்நூலை உலகிற்குதவியாக இயற்றியருளிய சேக்கிழார் பெருமானுக்குப் பல வரிசைகள் அளித்தனன்.



சேக்கிழார், தில்லையம்பதியில் தங்கியிருந்து சில ஆண்டுகட்குப் பின்னர்ச் சிவபெருமான் திருவடி நீழலெய்தினரென்பர். இவரைத் 'தொண்டர் சீர்பரவுவார்' எனவும் இவர் இயற்றிய நூலைப் 'பெரிய புராணம்' எனவும் கூறி, அறிஞர் பலரும் பாராட்டுவாராயினர். மற்றும் இவரது பெருமையெல்லாம் ஈண்டுரைப்பின், இது வரம்பின்றி விரியுமாதலின் அதனைத் திருத்தொண்டர் புராணமெனப்படும் பெரிய புராணத்தைப் பன்முறை ஓதியுணர்ந்து கொள்க.

### சயங்கொண்டார்.

சயங்கொண்டார் என்பவர் சோழமண்டலத்திலே திருவாரூரைச் சார்ந்த தீபங்குடி என்னும் ஊரின்கண் பிறந்த நல்லிசைப் புலவராவர். இவர், பெரும் புலமை படைத்தவராய் நம் குலோத்துங்க சோழனைக் காண்பது கருதி, அவன் அவைக்களத்தை அடைந்தபோது, அவ்வரசன் 'நுமது ஊர்யாது'? என்று வினவ,

எண்சீர் ஆசிரியச் சந்தவிருத்தம்.

செய்யும் வினையும் இருளுண் பதுவுந் தேனும் நறவும் ஊனுங் களவும்
பொய்யுங் கொலையும் மறமுந் தவிரப் பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் இதழும் விழியும் காலும் நிறமும் போதுங் கமலங்
கொய்யும் மடவார் கனிவா யதரங் கோபங் கமழுந் தீபங் குடியே.

என்ற பாடலால் தம் புலமைக்கேற்ப விடை கூறினர். அரசன் அவரது புலமைக்கு வியந்து; தன் அவைப் புலவர்களுள் ஒருவராக அவரை இருக்கச் செய்தனன்.

இவர் அரசற்கு விடை கூறிய பாடலில், பொய் கொலை முதலியன நீக்குதலையும், சமணர்க்குச் சிறந்த இரவுண்டல் தவிர்தலையும், தமதூர் சைனக்கடவுளின் தலமாயிருக்குஞ் சிறப்பையும் எடுத்துரைத்துப் புகழ்ந்திருத்தலாலும், இவரது ஊர் இன்று

சைனர் மிகுந்துறையும் இடமாயிருத்தலாலும், இவர் சைனமதத்தினராதல் தெள்ளிது. அம்மதத்தினராய இப்புலவரை, சிந்தாமணி முதலிய நூற்களைப்பயின்று சைனமதப்பற்று மிக்குடையனாயிருந்த முதற் குலோத்துங்க சோழன் நன்கு ஆதரித்துத் தன் அவைக்களப் புலவர்தலைவராக அமர்த்திக்கொண்டனனென்பது மிகப்பொருத்த முடையதேயாம்.

இனி, இப்புலவர் தம்முடன் வாதம்புரிவான் போந்த தென்னாட்டுப்புலவர் சிலரை வென்ற காரணம்பற்றி, 'சயங்கொண்டார்' என்றழைக்கப் பெற்றனர் என்பர். ஆயின், இவரது இயற்பெயர் யாதென்பது இப்போது தெளியக்கூடவில்லை.

கலிங்கரைத் தொலைத்து வாகை மிலைந்த குலோத்துங்கன், இப்புலவரை நோக்கி, 'புலவீர்! யானும் சயங்கொண்டானாயினேன்' என்றனன். உடனே புலவர், 'அங்ஙனமாயின், சயங்கொண்டானைச் சயங்கொண்டான் பாடுதல் மிகப்பொருத்தமுடைத்தன்றோ' என உரைத்துப்போய், சின்னாட்களில் 'கலிங்கத்துப் பரணி' என்ற ஓர் அரியநூலை இயற்றிவந்து அரசனது அவைக்களத்தே அரங்கேற்றினர். அப்போது அப்பரணிநூற் பாடல்களைப் பரிவுடன் கேட்டுக்கொண்டு வீற்றிருந்த வேந்தர் பெருமான் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், பரிசிலாகப் பொற்றேங்காய்களை ஒவ்வொன்றாக உருட்டித்தந்து இவரையும் இவரியற்றிய நூலையும் பெரிதும் சிறப்பித்தனன்.

இக்கதை எவ்வாறாயினும், இப்புலவர், தாம் அரசன்பாற் கொண்ட பேரன்பின் பெருக்கத்தால், அவனது கலிங்க வெற்றியைச் சிறப்பிக்கக் கருதி, 'கலிங்கத்துப்பரணி' என்ற நூல் யாத்தனரெனக் கோடலில் இழுக்கொன்றுமில்லை. பரணிநூற் கேட்ட வளவர் பெருமானும் புலவர்க்குத் தக்கவாறு பரிசில் அளித்துப் பாராட்டியிருத்தலுங் கூடும்.

இனி, இவரியற்றிய பரணி சொற்பொருள் நயங்கள் நன்கமையப்பெற்று நிலவுதலால், இவரைப் "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று முற்காலத்திய அறிஞர் புகழ்ந்துரைப்பா



ராயினர். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரும் இப்பரணியிலுள்ள சிலபாடல்களைத் தம் உரையில் மேற்கோளாக எடுத்தாண்டிருத்தலோடு, இதன் ஆசிரியராகிய சயங்கொண்டாரைக் 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் புகழ்ந்துள்ளார். இவற்றாலும் இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். இப்பரணியிற் பண்டைச் சோழவேந்தர்களது வரலாறுகள் கூறப்பட்டிருத்தலால், சோழரைப்பற்றி ஆராய்வார்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். அன்றியும் பண்டைக்கால வழக்க வொழுக்கங்களுட் பலவற்றை இந்நூலிற் காணலாம்.

இனி, இப்புலவர், தம் பரணியில் சிவபெருமான், திருமால், நான்முகன், விநாயகர், முருகவேள், உமாதேவி முதலாயினோர்க்கு வணக்கங்கூறியிருத்தலால், பரணி பாடிய காலத்திற் சைவ மதத்தினராக மாறியிருத்தல் வேண்டும் என்பது நன்கு விளங்குகின்றது. சைன மதப்பற்றுடையனாயிருந்த குலோத்துங்கன் சேக்கிழாரது சேர்க்கையால், அப்பற்றொழித்து சைவப்பற்றுடையனான காலத்தே சயங்கொண்டாரும் தம் அரசனைப்போல் தாமும் சைவராக மாறியிருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கப்படுகிறது. அவ்வாறாயின், அதன்பின்னரே இவர் பரணி பாடியிருத்தல் வேண்டும்.

(தொடரும்.)

# முருகன் சிறுவிளையாடல்

(முற்றொடர்ச்சி 99-வது பக்கம்.)

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

---

## முட்டையெனப் பெயர் கட்டுரைத்த வாடல்.

*பொதியி லகத்தியனைப் பொய்யா மொழியாய்ச்*
*சிதைவில் புலவர் சிறப்பாய்த்—துதிசெய்யச்*
*செங்காட்டங் கோட்டத் துறையூ ரெனுந்தலத்துத்*
*தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.*

என ஆன்றோர் எடுத்துரைக்கும் தொண்டை நன்னாட்டுச் செங்காட்டங் கோட்டத்துத் துறையூரிற் பிறந்து, கல்வி பயிலும் இளம்பருவத்தில் காளியின் திருவருளாற் கவிபாடுந் திறம்பெற்றுச் சிறந்திருந்த புலவர் பொய்யாமொழி என்பவர். இவரது பிள்ளைத் திருநாமம் தெரிந்திலது. இவர், அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயக்கும் நிறைமொழியினராதலின், பொய்யாமொழி எனப் பெயர்பெற்றனர்போலும். இப்புலவர் பெருமான் கல்வியின் மேம்படுதற்குக் காளியின் அருளன்றே காரணமாக இருந்தது! அதனால் அவளையன்றி மற்றைக் கடவுளரைப் பாடுவதில்லை என மனம்வலித்திருந்தனர். இவரது கொள்கை இதுவாக.

திருப்புகழ் கேட்கும் விருப்பனாகிய முருகப்பெருமான், ஒருநாள் பொய்யாமொழியார்க்கெதிர்தோன்றிப் 'புலவீர்! நம்மீது ஒரு கவி பாடுக' என்று கேட்டருளப் 'பெட்டையையும் பாடி முட்டையையும் பாடுவேனோ' என மறுத்தனர் புலவர். அதாவது தாயைப்பாடும் நான் பிள்ளையைப் பாடேனென்று சொன்னது.



அதைக்கேட்ட பெருமான் இவரது மனக்கோட்டத்தினை யொழிக்கத் திருவுளங்கொண்டருளினர். அதன்பின்னர் சின்னாட் சென்றன.

அக்காலத்தில் தென்னாட்டில் தஞ்சாக்கூரில் பாண்டியர்க்கு அமைச்சனும் தானைத்தலைவனுமாயிருந்த சந்திரவாணன் என்பவன் பாவுக்கிசைந்த புகழுடையனாய்ச் சிறந்திருப்பக்கேட்ட நம்புலவர், நாவுக்கிசைந்த கோவையொன்று அவன்மீது பாடிச் சென்று அரங்கேற்றிப் பரிசுபெற்று மீண்டு காட்டின் வழியே தனித்து வருவாராயினர்.

அப்பொழுது எந்தையாகிய கந்தவேள், தலையிற் பீலிசெருகி மார்பில் அக்குவடமின்ன, இடையிற் கச்சணிந்து, கையில் விற்பிடித்து, காலில் கழல்பூண்டு, காளைப்பருவத்து வேட்டிளங் குமரனாய்ப் புலவரை எதிர்ப்பட்டு, 'அடே! எங்குப் போகின்றாய்? நில்நில்; உன்னிடத்துள்ளவற்றை இங்குவைத்து அப்பாற்செல்' என்றுரைத்து உரப்பினர்.

என் செயவல்லார் புலவர்! ஒன்றும் தோன்றாது திகைத்தனர்; 'இன்று கள்ளன் கையிற் சிக்கினேம்; இனி யாது செய்வேம்' எனச் சிந்தித்தனர்; அஞ்சித் திகைத்து நெஞ்சு துண்ணென நாவெழாது நின்றனர்; பின்னர் வாய்குழற, 'அப்பா! நான் பணக்காரன் அல்லன், ஒரு எளிய புலவன்' என்றனர்.

'ஓகோ நீ புலவனோ! அப்படியாயின் உனக்குக் கவிபாடத் தெரியுமா?' என வினவினன் வேடன்.

'இவன் கல்விமணமுடையவன் போலும்; ஆகவே நமக்குத் தீமைபுரியான்' எனத்துணிந்த புலவர், தெரியும் என விடைதந்தனர்.

உடனே வேட்டுவக்குமரன், நாம்போக்காக என்மீது ஒரு பாட்டுப்பாடு என்றனன்.

'பாடுகின்றேன் உன் பெயர் யாது?' என்றனர் புலவர். அவனும், முன்னர் 'என்மீது பாடுக' என்றபொழுது, 'முட்டையையும் பாடுவனோ' என இவர் கட்டுரைத்ததைக் கேற்ப, தன் பெயர் 'முட்டை' என்று மொழிந்தனன்.

அதைக்கேட்ட புலவர்,

"பொன்போலுங் கல்விப் பொறிபறக்குங் கானகிலே
மெய்ப்பேதை செல்லற் கிசைத்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு."

எனப்பாடி முடித்தனர்.

அவ்வளவில், 'இச்செய்யுள் சொற்குற்ற மில்லதெனினும் பொருட்குற்ற முடைத்து. அஃது என்னென்பையேற் கூறுவேன், கேள்: வெட்டி உலரவிடினும், காட்டுக்காயும் இயல்பினையுடைய கள்ளி, வெந்து பொரியாகப் பறக்கும் பாலை நிலத்தில் பச்சையினும் தீப்பட்டு வேகும் தன்மையுள்ள வேலாமுள், வேகாதிருந்து காலிற் றைக்கும் என்றது எங்ஙனம் பொருந்தும்? இத்தகைய வழுவமைந்த பாட்டினைப் புலவர் பாடுவரோ? இனி நான் பாடுவேன் கேட்பாய்' என்றிசைத்து,

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்த சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்"

என்று பாடுவாராயினர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னுங் கடப்பாடுடையார், காய்தலும் உவத்தலுமின்றி எப்பொருளையும் ஆராயும் இயல்பினராதலின், இச்செய்யுளைக்கேட்ட பொழுதே செருக்கழிந்து, 'எந்தப்புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ யாரறிவார்? உருவுகண் டெள்ளுதல் இழுக்கென்பது விளங்கிற்று.



இவனை வேட்டுவனென்று எளிதாக நினைத்தேன். இவனது கல்வியறிவு இருந்ததை என்னென்பேன்? அறிவென்பது யாரிடை அடங்கிற்று?' எனப் புலவர் பலபட நினைத்து வியந்து நிற்கையில், முன்னர் முருகன் போந்து தன்னைப்பாடக் கேட்டபோது முட்டையைப் பாடேனெனத் தாம் மறுத்துரையாடியதும், பின்னர் வந்த வேட்டுக்குமரன் தன்பெயர் முட்டையெனச் சுட்டியதும் தம் கருத்திற்றோன்றவே, சிந்திப்பார் நான் கூறிய முட்டை யென்றதனையே தன்பெயராக உரைத்த இவன் வேட்டுவனல்லன், முருகனே யாதல் வேண்டும். உலகின்கண், தாய்தந்தையர் தம் சொற்கடங்காத மக்களைத் தண்டம் புரிந்து தம் வழிப்படுத்துவது இயற்கை. அவ்வாறு அவர் செய்வது அம்மக்கண்மேல் வைத்த காதலையன்றி வேறோ? அதுபோலவே, முருகவேளும் தன் அறக்கருணையைப் பொருட்படுத்தாத என்பால் எளிதாக எழுந்தருளி இம்மறக்கருணையைக் காட்டியதும் அடியனேனை உய்வித்தற் பொருட்டன்றோ! இதனை முன்னமே ஆராயாமற் கெட்டேன். என்னே! என்பேதைமை இருந்தவாறு!' என முருகப்பிரானது அருட்டிறத்தினையும் தமது அறிவின்மையையும் நினைந்து நினைந்து உள்ளமுருகி வருந்திய அளவில், முருகன் வேட்டுவக்கோலம் நீங்கித் தொல்லுருக்காட்டியருள, அடியற்றமரம்போலப் படிமிசை வீழ்ந்து பன்முறையும் வணங்கி எழுந்துநின்று, 'எந்தையே! என் குற்றம் பொறுத்தருள்க' என வேண்டிட, ஆறிருதடந்தோளண்ணல், 'புலவ! அஞ்சற்க. நாம் இவ்வாறு நின்னைச் செய்ததெல்லாம் நின்பாடலைக் கேட்பதற்கேயாம்' எனப்புன்னகைபுரிந்து தன்னுருக்கரந்தனன்.

## அவ்வையை நாவற்றி மாய்ந்தவாடல்.

"இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ"

எனத் தம்மைப் பெற்றவளைத்துப் பிரிதற்காற்றாது வருந்திய அன்னைக்கு மனத்துணிவு தோன்றுமாறு மழவிளங்குழவிப் ப

வத்தே ஞானவுணர்வொடு கூறினவர் அவ்வை என்பர். இவரை நாமகளின் தோற்றமென்பர். இவர் கூழைப்பலாத் தழைக்கவும், பனந்துண்டம் பங்குக் கிரண்டு பழந்தரவும், பெண்ணையாறு நெய்யும் பாலும் தலைப்பெய்து வரவும், வருணன் பொன்மாரி பெய்யவும், பருத்தி ஆடையாகக் காய்க்கவும் பாடி, யாவரையும் வியந்திடச் செய்த பின்னர், மாடம் மலிந்த கூடலம்பதியை அடைந்து, தம்மினும் மிக்கார் இல்லையெனச் செருக்குற்றிருந்த புலவரை வாயடக்கிப் பலரும் போற்றிட இருக்கின்ற நாட்களில், ஒருநாள், சோணாடு மீளக்கருதி வானெறி யடைக்கும் கான்வழியாக வருவாராயினர்.

அப்பொழுது, எவரையும் வென்றதாக எண்ணிச் செல்லும் இவரை நாம் எமாற்ற வேண்டுமெனத் திருவுளம்பற்றிய குமாரவேள், கையினில் தாம்பும் சிறுகோலும் கொண்டு எருமைமேய்த்திடும் இடைக்குலச் சிறுவனாக உருக்கொண்டு, ஒரு நாவன் மாத்தின் மீதேறிப் பழம்பறித்துத் தின்பவர் போல நடித்திருந்தனர்.

அவ்வையார், நடுப்பகலில் நடந்து வந்தவாதலால், அம்மாத்தடியை அணுகிய உடனே களைப்புடன் உட்கார்ந்து, மேலே அண்ணாந்து பார்த்து, மாடுமேய்க்கும் சிறுவன் பழம்பறித் துண்ணக்கண்டு, 'அப்பா தம்பி! நான் வெயிலில் நடந்து சோர்வடைந்துள்ளேன்; நீர்வேட்கையால் நாவுலர்கின்றது. எனக்குக் கொஞ்சம் பழம்பறித்துப் போடு' என்றனர்.

அதனைக்கேட்ட சிறுவன், 'கிழவி! இம்மாத்தில் சுடுகிற பழங்களும் சுடாத பழங்களும் இருக்கின்றன. அவற்றுள் உனக்கு எவை வேண்டும் சொல் போடுகிறேன்' என்றனன்.

'இஃதென்னை வியப்பு! நாவற்பழத்திற் சுடுகிறபழம் எவ்வாறிருக்கும்' எனச் சிறிது நேரம் நினைத்திருந்தும் ஒன்றுந் தோன்றாமையால், சுடுகிறபழம் எனக்கு வேண்டாம்; சுடாதபழமே போடு' என்றனர் அவ்வையார்.

உடனே சிறுவன் மாக்கிளையைக் கையாற்பற்றி அசைத்தனன், கனிந்த பழமும் கனியாத பழமும் உதிர்ந்தன.



அவ்வையார், அவற்றுட் கனிந்த பழங்களிற் சிலவற்றைப் பொறுக்கி, அவைகளில் மணல் ஒட்டியிருப்பக்கண்டு, அன்னவை நீங்க வாயினால் ஊதுவது கண்ட சிறுவன், 'கிழவி! என்ன சுடாதபழங் கேட்ட நீ இப்பொழுது சுடுகிற பழங்களைத் தின்னப் போகின்றனை; வாய் வெந்துவிடும், நன்றாக ஊதி ஆறியபின்னர்த் தின்பாய்' என்று அசதியாடினன்.

அப்பொழுது, சுடாதபழம் காய் என அறிந்த அவ்வையார் இப்பொருள் நமக்கு விளங்கிற்றில்லையே என வெட்கி, புலவர் பலரையும் வென்ற நான் மாடுமேய்க்கும் சிறுபையலுக்குத் தோற்றேனே என்று மனங்கவன்று,

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவுந் துஞ்சாதென் கண்"

என்றுரைத்தனர்.

உடனே முருகக்கடவுள், அவ்வைமீது அருள்சுரந்து, தமது மெய்யுருக்காட்டியருளி, 'உம்மோடொத்த புலவரும் உலகினில் உளரோ? உம்மை இகழ்வது எம் கருத்தன்று; உம்மொடு விளையாட வந்தேம்; கவலுதல் ஒழிவீர்' எனத்தேற்றி, கரங்களைப்பற்றிக்கொண்டு புன்னகைபுரிந்து 'புலமைமுற்றிய பெரியீர்! உலகில், அரியது, இனியது, கொடியது, பெரியது எது?' என்று வினவிட,

"அரியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே;
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையு
மூங்கையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்த லரிது;
பேடு நீக்கிப் பிறந்த காலையும்,
ஞானமுங் கல்வியு நயத்த லரிது;
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்,

தானமுந் தவமுந் தரித்த லரிது ;
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே"

"இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்த மினிது ;
அதனினு மினிது ஆதியைத் தொழுதல் ;
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல் ;
அதனினு மினிது அறிவுள் ளாரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே"

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது ;
அதனினுங் கொடிது இளமையில் வறுமை ;
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய் ;
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர் ;
அதனினுங் கொடிது
இன்புற வவர்கையி லுண்பது தானே"

"பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய் ;
பெரிது பெரிது புவனம் பெரிது ;
புவனமோ நான்முகன் படைப்பு ;
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன் ;
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன் ;
அலைகடல் குறுமுனி கையி லடக்கம் ;
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன் ;
கலசமோ புவியிற் சிறுமண் ;
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம் ;
அரவோ உமையவள் சிறுவிரன் மோதிரம் ;
உமையோ இறையவர் பாகத் தொடுக்கம் ;
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம் ;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே."

[illegible] என உரைப்பக் கேட்டுக் குன்றமெறிந்த குமரவேள் தன்னுள மகிழ்ந்து இன்னருள் புரிந்தனன்.



## பிரமனைக்குட்டிச் சிறைசெய் யாடல்.

விண்ணினும் மண்ணினும் ஆட்டினை ஊர்ந்து ஆடல் புரிந்து இலக்கத்தொன்பதின்மரும் பாரிட வீரரும் போற்ற அம்பொன்னாலயத்துள் இன்பொடு வைகிய அறுமுகத்தண்ணல், வானவரோடு போந்து ஈசனை வணங்கி ஏகும் நான்முகனை 'நம் முன் வருதி' என விளிப்ப வந்தவன் பணியாது தொழுதனன். அவனது உள்ளக்கருத்தினையறிந்த முருகவேள், 'போதனே! இருக்க' எனப்பணித்து, 'நாடோறும் நீ செய்யும் தொழில் யாது?' என, 'நம்பன் அருளால் நான் அனைத்தையும் படைப்பன்' என்றனன் நான்முகன்.

அதுகேட்ட கந்தன் நகைபுரிந்து, 'உலகையும் உயிரையும் படைப்பாயென்னின், மறைகளை அறிவையோ? மொழிக' எனப் பிரமன் பேசுவான். 'ஐய! கேட்டருள். தொன்னாளில் எண்ணரு மறைகளையும் ஆகமங்களையும் அருளிய இறைவன், அவற்றுள் எனக்குணர்த்திய சிலவற்றை அறிந்துளேன்' என்றவளவில், 'இருக்கொன்றினை நீ இயம்புதி' என்று முருகவேளுரைப்ப, நன்றென இசைந்து ஓமெனு மொழியை முன்னர்க் கூறி மறையினைச் சொல்லத் தொடங்கினன் நான்முகன்.

உடனே குமரவேள் 'வேதனே! நிற்றி. நீ முன்னர் இசைத்திட்ட ஓமெனப்படும் மொழிப்பொருள் உரை' யென நவில, அவனும் அதன் பொருட்டிறம் தேறமாட்டாமையின், விழித்தனன் வெள்கினன் திகைத்தனன்.

ஈசன் வீற்றிருக்கும் பீடமாய், எல்லா எழுத்திற்கும் மறைக்கும் முதலாய், காசியில் இறப்பவர்க்கு எம்பிரான் கழறுவதாகிய பிரணவத்தினைச் செப்புவதன்றிப் பொருளறிந்திலன். என் செய்வான்? கண்ணுதற்புனிதன் அருளால் முன்னரே பெற்றிலன்; அதனால் மருளுற்றனன். அதன் பொருளினை யாரே வகுக்க வல்லார்? மறைகட்கெல்லாம் முதலினும் முடிவினும் சொல்லப்படும் ஓரெழுத்துண்மையை உணராது நான்முகத்தவனும் மயங்கினனென்றால் நாம் அறிந்தனம் எனச் சிலர் நவில்வது நகையன்றோ?

இங்ஙனம் அயன் குடிலையின் பொருள் இனைத்தென அறியாது மயங்கலும், 'இதன் பொருள் உணராத நீ சிருட்டி செய்வது இத்தன்மையதோ' என, அவனது நான்கு முடிகளும் குலுங்கக் குட்டினன்; பதத்தினால் வீழ்தர உதைத்துப் பரிசனரை நோக்கி வல்லிபூட்டிச் சிறைபுரிந்திடுதிர் எனப் பணித்திட்டு, ஒருகரத்திற் குண்டிகையும் ஒரு கரத்தில் மணிவடமும் தாங்கி, மற்றிரு கரங்கள் வரதமும் அபயமும் தர, ஒரு திருமுகத்தோடிருந்து நான்முகன் போலப் படைத்தல் செய்திருந்தனன் குமரன்.

உயிர்க்குயிராய்ப் பேரொளியாய் மறைகளின் முடிந்த பொருளாய் ஐந்தொழிற்கும் முதலாய் நின்ற செவ்வேள் அயனெனப் படைக்கின்றதும் வியப்பாமோ!

---

## அயனைச் சிறைவிடுத்தருளிய வாடல்.

அறுமுகன் இவ்வாறு அளப்பில் காலமளவும் ஆக்குந் தொழிலினை மேற்கொண்டிருக்க, நான்முகனைப் பழைய நிலையில் நிறுத்தக் கருதிய திருமால், வானவர் முனிவரர் ஏனையோர் பின்வரச் சென்று கயிலையை அடைந்து, நந்தி உய்ப்பத் திருமுன் சார்ந்து திருவடி வணங்கி இறைஞ்சி நிற்குமளவில், கண்ணுதற் பெருமான் கடைக்கணித்தருளி, 'நீவிர் யாவரும் மிகவும் தளர்ந்துள்ளீர்; யாது உமக்கு எய்தியது?' எனக் கேட்கச் சீதரன் கூறும்: 'இறைவ! இங்குற்ற பிரமனை நின்மகன் குடிலைக்குப் பொருள் வினவினன். அவன் உரைத்திடாமையின், அவனைச் சிறைபுரிந்து சிருட்டியுஞ் செய்கின்றான். கஞ்சனும் கந்தனைப்போல நின்மைந்தன். அளவில் காலமாக அருஞ்சிறைப்பட்டு நொந்து வாடினான், அவனைச் சிறைநீக்கியருள்' என வேண்டியவுடனே, நம்பன் நந்தியை நோக்கி, நீ கடிதிற் சென்று நம் கட்டுரை கூறி அயனைச் சிறை நீவித்து இவண் மீள்கெனச் சாற்றினான்.



நந்தியும் நாதனைத் தாழ்ந்து விடைகொண்டு கணங்கள் சூழ்தரப்போய்க் கந்தவெற்பினை யெய்தி அறுமுகத்தண்ணலை அடிபணிந்தேத்தி, 'மலரயனைச் சிறைவிடுமாறு நின்பாற் கூற என்னை விடுத்தனன் எந்தை. குடிலையின் பொருள் அவன் கூறற்கு எளியதோ? தடைபடாது அவனைச் சிறைநீக்குதி' என்னுமுன், இளையவன் சினந்து, 'அன்னவூர்தியைச் சிறை நீக்கலன். நிற்பையாயின் நின்னையும் சிறைவீட்டுவன்; நில்லாது விரைந்தேகுதி' என்றிசைப்ப, ஒன்றும் பேசா தொடுங்கிக் கந்தன் மலர்ப்பதத்தை வந்தனைபுரிந்து கயிலையை யணுகிக் கண்ணுதற் பரமனைக் கைதொழுது பரவி நிகழ்ந்தன யாவும் மொழிந்தனன் நந்தி.

நந்தி மொழிந்தன கேட்ட நம்பனும் சிறுநகை யெய்தி அரியணைவிட்டெழுந்து, முகில்வண்ணன் முதலாயவர் புடைசூழ மால்விடை இவர்ந்து கந்தவெற்பினை வந்தணுக, எந்தை யெய்தினனெனச் சிந்தை மகிழ்ந்த கந்தவேள், எதிர்கொண்டு வணங்கித் தன்ன தாலயத்துக் கொடு சென்று அணைமீதமர்த்தி, 'அத்த! இங்கு நீ வந்த காரியம் யாது?' என இயம்பினன்.

'மைந்த! அயனைச் சிறையிட்டனை. அதனை நீக்கக் கருதி வந்தேம். அவனைச் சிறைவிட்டுதி' என்றனன் இறைவன்.

'ஐய! நன்று மொழிந்தனை' எனத் தலைதனை அசைத்து, 'ஓரெழுத்தின் பொருளை உணராதவன் மறைகளில் வல்லதும் மானிலம் படைப்பதும் பேதைமையன்றோ? நின்னை அர்ச்சிக்க, ஆக்குந்தொழிலை நீ அவன்பாற் சுமத்தினை; எவற்றையும் படைத்தலால் எவரையும் பொருளாக எண்ணலன். நின்னை வந்தனை செய்யினும் தன்ன தகந்தை தவிர்கிலன். ஆதலால் அவனைச் சிறை நீக்கலன்' என்றனன் குமரன்.

'அயனைச் சிறைவிடென்று நம் பணியாலேகி நந்தி நவின்றதும் கொள்ளாய். நாம் வந்துரைக்கவும் கேட்டிலை; மறுத்து எதிர்மொழிந்தனை. மைந்த! நின் செய்கை என்னே!' எனச் சினந்தவன் போலச் செப்பினன் நாதன்.

'அத்தனே! நின் சித்தம் இதுவாயின் அயனைச் சிறை நீக்கி ஒல்லையிற் கொணர்வேன்' என்றியம்பித் தன் பக்கலில் நின்ற பரிசனரை நோக்கி, 'நீவிர் போய் மலரவனைச் சிறைநீக்கி நம் முன் இன்னே தந்திடுதிர்' என்ற அளவில், சாரதருட் சிலர் சடுதியிற் சென்று வேதனைத் தளையினீக்கிக் கொணர்ந்து உய்ப்பவே, குமாரவேள், அயனைக் காம்பற்றி அண்ணல் முன் விடுத்தனன்.

அவன், பரமனை அன்பாற் றாழ்ந்து வெள்கி நிற்ப, 'இருஞ் சிறையிற் பன்னாளிருந்து எய்த்தனை போலும்' என்று நாதன் இயம்பி அருள்புரிதலும், 'ஐய! நின் புதல்வன் ஆற்றிய இத் தண்டம் ஏதமன்று; உணர்வு நல்கி யான் என்னும் அகந்தை நீக்கித் தீவினைகளை மாற்றி என்னைப் புனிதனாக்கிற்று' என்றுரைத்த பிரமனை, 'நீ இப்பகல் தொட்டுத் தொன்மையிற் போல முப்புவனமும் படைத்திரு' என்று விடுத்த பின்னர், முருகவேள் முகத்தை நோக்கி முறுவல் செய்து, 'ஐய! வருதி' என மலர்க்கையாற் பற்றிக் குறங்கின்மீது வீற்றிருப்பச் செய்து உச்சி மோந்து மார்போடணைத்துப் 'பிரமனுந் தேறாத பிரணவத்தின் பொருள் உனக்குப் போமோ? போமெனின் அதனை இன்னே புகல்' என இறைவன் கூறினான்.

'ஆதி முதல்வ! உலகமெல்லாம் பெற்றெடுத்த அன்னைக்குப் பிறர் அறியாவண்ணம் முன்னர் நின்னால் உணர்த்தப்பெற்ற இப் பொருளை மறையினில் இசைக்கலாமே யல்லது யாவருங் கேட்ப இத்தன்மைத்தென இயம்பலாமோ' எனக் குமரன் கூற நகைத்து, 'மைந்த! அதுவாயின் மறையின் எமக்கருள்' என்று தன் திருச் செவி சாய்ப்ப, சண்முகன் குடிலையின் பொருளையுரைத்திடக் கேட்டு, ஐயம்நீங்கி அகமகிழ்வெய்திக் கண்ணுதற் பரமன் கயிலையை அடையக் கந்தவெற்பில் புடைதனில் வயவர் போற்றக் குமாரமூர்த்தி இனிது வீற்றிருந்தனன்.

---



## வள்ளியைக் களவின் மணந்த வாடல்.

அவ்வரையின் ஒருசார், தவம்புரிந்திருந்த சிவமுனி, இளமைச் செவ்விவாய்ந்த நவ்வியொன்று அங்குப் போதர, அதனை ஆர்வமொடு நோக்கினன்.

அப்பொழுது, கந்தவேள் ஆணைதாங்கி அவ்வரைப்பில் வந்து அருந்தவம் ஆற்றிநின்ற அமுதவல்லி, செவ்விதேர்ந்து அம்முனிவரன் நோக்கின்வழியே மானின் கருவயிற்புக, அம்மானும் சூன் முதிர்ந்து புனத்தில் வள்ளியம்பயம்பிற் பிள்ளையை யீன்றுவைத்து 'இது நம்மினத்ததன்று' என்று மருண்டு, அஞ்சியகன்றது.

தன்னையீன்ற மான் அகன்றதற் பின்னர்த் தன்னந்தனியே கிடந்த மழவிளங்குழவி அழலுற்றது.

நல்வினைப்பயன் கைவருகாலமாதலால், கொடிச்சியும் பரிசனமும் பாங்குவாப் புனத்திற்புக்க கானவர்கோமான் செவியில் இம்மழவழும் ஓசை சென்று தைத்தது. கொடும்புலி வாழும் இக்கானகத்திற் கேட்கும் இது எவ்வொலியோ என ஐயுற்று மிகவும் உற்று நாடினான்; குழலிசையும் யாழிசையும் குழைவுறும் குழவியின் அழுமிசையா யிருப்பதறிந்து வியப்புற்று, அவ்வொலியெழும் திசைநோக்கி நடந்து, வள்ளிக்குழியிற் கிடந்த பிள்ளைப்பிணாவைக் கண்ணுற்று, 'இந்தா இஃதோர் இளங்குழவி' என்றெடுத்துத் தேவிகையிற் கொடுத்தான். நெடுநாளாகத் தவங் கிடந்த பயனாகக் கிடைத்த பெண்மகவைக் கண்டவுடனே உவகை மீதூரக் கையிற் றாங்கியிருந்த வில்லை நிலத்திட்டான்; எழுந் தோங்கிப் பாய்ந்தான்; முறுவலித்தான் தோள்புடைத்தான்: முற்பிறப்பில் நான் செய்தவமே நற்றவம் போலும் என்றான். பின்னர் நிலத்துவீழ்ந்த சிலையைக் கைக்கொண்டு, தம்மனைக்கிழத்தியொடு புனமகன்று சென்று, சிற்றூரிலுள்ள சிறு குடியிற்புக்கு, கிளைஞரொடு விருந்தினிதருந்தி, தொண்டகமார்ப்பக் குரவை தூங்குவித்துக் காலையிற் கடவுட்பலி செலுத்தி, சிறுதினையும் செம்மலருந்தூவி, மறியறுத்துக் குமரன்விழாக் கொண்டாடி வேலனைக்கொண்டு வெறியாட்டு நேர்வித்தான்.

அன்னகாலையில், கொடிச்சி, சேமநிதிபோற் கிடைத்த குழவியை மார்போடணைத்து உச்சிமோந்து முத்தமிட்ட அளவில் தனம் சுரந்திட மகிழ்ந்து, மகவுக்கமுதருத்திக் காப்பணிந்து பொன்னஞ்சிறை படுத்த பூந்தொட்டிலேற்றினள்.

மூத்து நரைத்த முதாளர் வந்தீண்டி, வள்ளிபடுகுழியில் வந்திடலால், 'இவள் நாமம் வள்ளி என்று வழங்குக' என வாழ்த்தினர்.

பின்னர், குன்றக்கோமானும் கொடிச்சியும், தம்மகளாக அன்புபாராட்டி வளர்த்திடத் தவழ்ந்து தளர்நடையுற்றுக் கனிபரப்பு மணிநிழலில் உலாவி, முறத்தின்மணி கொழித்துச் சிற்றில் கோலிச் சிறுசோறட்டு, இன்னன பிற வண்டலயர்ந்து கற்பகக் கொம்பெனப் பொற்பொடு வளரும் செவ்வியில், பைந்தொடி வள்ளிக்குப் பன்னிரண்டு யாண்டு சென்றன.

பருவங்கண்ட தாயும் தந்தையும் காட்டில், எளிதாகக் கிடைத்த கடவுண்மணியைக் குரீஇயினம் கூட்டில் இருளோட்ட வைப்பதுபோல, தம்மரபின் முறைமைக் கேற்ப, ஏனற்புனத்தினை இனிதளிக்க வைத்திட, இதண்மீதமர்ந்து, தட்டை, குளிர், தழல் என்னும் கருவிகளைத் தாங்கி, கிளிமுதலாய புள்ளினம் புனத்தை அணுகுறுத வண்ணம் ஓட்டி, எய்பும் இரலையும் மானும் மரையும் ஏனற் குரல்களைக் கவர்ந்திடாது கல்லைக் கவணிலிட்டுக் கையாலெடுத்துக் கடிதோச்சி,

"பூவைகாள்! செங்கட் புறவங்காள்! ஆலோலம்
தாவிமா மஞ்ஞைகாள்! சொற்கிளிகாள்! ஆலோலம்
கூவல்சேர் வுற்ற குயிலினங்காள்! ஆலோலம்
சேவல்காள்! ஆலோலம்"

என்று ஒலிபோக்கிப் புனங்காத்திருந்தனள் திருந்திழை வள்ளி. இவள் செய்கை இவ்வாறாக.

கதிர்வேலண்ணல், முன்னர் அமுதவல்லிக்கு வழங்கியவாறு அருள்புரியக் கருதிக் கந்தவரைப்பினீங்கித் தணிகைமாமலைக்கண் வந்துற்றனன்.



அங்குசென்ற நாரதன், கந்தனை வணங்கி வந்தனைபுரிந்து நிற்க, 'முனிவ! யாதேனும் புதுவது உண்டுகொல்?' என 'எந்தாய்! மாயோன் மகள் நின் மொய்ம்பினைத் தோய்தல் காரணமாக நோற்று, மான் வயிற்றிற் பிறந்து, கானவர்குலக் கன்னியாய் ஏனற்புனங் காத்திருக்கின்றாள். அன்னவள் பேரெழில் இருந்ததனை என் சொல்வேன்! பாரின் மகளிரேயன்றிப் பங்கயத்திருவும் அவட்கு நிகராகாள், இது பொய்ம்மை உரையன்று நேரிற் சென்று நீயே கண்டருள்' என்றனன்.

கந்தவேளும், 'முனிவ! நன்று நன்று நீ சென்று வருக' என்றுரைத்து, தொன்மறை வரம்பின் நன்னெறியாகிய யாழோர் கூட்டத்தினை, உலகில் நடந்துகாட்ட நயந்தருளி, காலிற் கழல் பூண்டு, அரையிற் கச்சணிந்து, தோளில் மாலைபுரளக், கையில் வரிவில்லும் வாளியும் தாங்கி, வேட்டுவக் கோலத் திளங்களிறென வள்ளிமால்வரைச் சாரலை வந்தெய்திப் பண்டு வைத்திட்ட பழம்பொருள் கண்டார்போல் ஏனற்புனத்தில் இளமயில் போல்வாளைக் கண்ணுற்று, அன்புமீதூரப் பாணுக் கணித்தாகச் சென்று, 'காந்தகம் அனையகண் நங்காய்! எந்திழையார்கட்கிறைவியாகிய நின்னைப் பூந்தினைக் காவல் வைத்த புளினர்க்கு, அற்றலும் பிறவும் அமைத்திட்ட நான்முகன், அறிவொன்றினையும் படைத்திலனோ? நலங்கனிந்த நல்லாய்! நின் பேரெழிலிற் பிணிப்புண்டு பேதுறுவேனுக்கு உன்றன் பெயரினை உரைத்தி; அதனை உரைத்திடாயென்னின், நின் ஊரினை உரைத்தி; அன்னதும் உரைத்திட முடியாதென்னின், நின்றன் சிற்றூர் செல்லும் வழியினையேனும் இற்றென உரைப்பாய்; பூவைபோலும் பாவாய்! மொழியும் புகன்றிலை முறுவலும் செய்திலை; வருந்தும் யான் உய்ந்து செல்லும் வழியும் காட்டிலை; இனிக் கடைக்கணித்திடாது மனமும் சற்றிரங்காயெனின், நின்பாற் பழிவந்தடையும்; ஆதலாற் பராமுகம் தவிர்த்தி' என்றுரைத்து, ஆசையால் வருந்துவான் போல, வள்ளிமுன் நின்று சின்மொழி பகரும் எல்லையில், இலையூத எயினர் சூழ்தர இறவுளர் கோமான் வந்தனன்.

அப்பொழுது, தழைத்துச் செழித்துப் பணைத்துக் கவடு போக்கி அரும்பி வண்டினமுரலத் தண்டேன் றுளித்திட மலர்ந்த கணியின் உருவாகி நின்றனன் கந்தன்.

தன்மகட்கு வள்ளியங்கிழங்கும் தினைமாவும் தேனும் கடமான் பாலும் தந்த வெற்பரையன், பாங்கரில் தழைத்த பூஞ்சினை வேங்கையினைக் கண்டனன். பரிசனர் பலரும் உரைத்தன பலவும் மனங்கொள்ளாது மகளை நோக்கி, 'அம்மா! இந் நறுமலர் வேங்கை இங்குத் தங்கியது எவ்வாறு? உள்ளவாறு உரைப்பாய்' என, 'எந்தாய்! இது வந்தவாறு உணர்கிலேன். மாயமாக வல்லையிற் றோன்றிற்று. நெருநலில் இல்லாததொன்று புதுவதாக முளைத்துளதே யாது விளையுமோ என மனம் வருந்தியிருந்தேன். யான் அறிந்தது இத்துணையே' என்று சொல்ல, 'எந்திழை! இந்நாண்மலர்வேங்கை நினக்கொரு துணையாக இவண் எய்தியது, நீ அஞ்சாது இங்கமர்தி' என்றுரைத் தேகினன்.

குன்றவர் கோமான் சென்றதற் பின்னர், முன்னையிற் போல மானுடவடிவு கொண்டு, கானவர் மகள் காணநின்று, 'குறவர்தம் பாவாய்! ஈங்கு நின்னையே தஞ்சமாக நினைந்தடைந்தேன். நின் பூங்குழலல்லது புகலிடம் பிறிதில்லை. கருங்கண் மாதராய்! நின்றனையகன்று நீங்கவும் வல்லனோ? உயிரை விட்டகன்று உடல் செல்வது எங்கேனும் கண்டதுண்டாயிற் கூறுவாய். நின் கண்வலைப்பட்டுக் கலங்குவேனைக் கடைக்கணித்திடாது புறக்கணிப்பையேல், யான் உய்திறம் எங்குளது? என் உயிர் நின் கையகத்தது, காத்துக்கொள். மாதராய்! முன்னரே தவம் கிடந்து நீ ஆடிடு சுனையதாய் அணிந்திடு சாந்தமாய்ச் சூடிடு மலர்களாய் நின்னைத் தோயப் பெற்றிலேன். செய்வதறியாமல் வாடினேன். மெல்லியலே! நீ இப்புனங் காப்பது புல்லிது. வருவையேல், வானவர் மகளிரும் வணங்கி வாழ்த்திடப் பல் வளன் துய்ப்ப வழங்குவேன்' எனப் பலப்பல பன்னிப் பகர்ந்து நிற்கும் பண்ணவனது உள்ளக் கருத்தினை உற்று நோக்கி, 'இவாது செய்கை நன்று' என நாணுற்றுக் கூறுவாள்.



'நான் இழிந்த எயினர் குலத்துப் பிறந்தபாவை, நீரோ வென்றால் முழுதுல களித்திடும் முதல்வர். இவ்வாறாகவும், என்னைத் தழுவுதல் காரணமாக நீர் தாழ்ச்சி சொல்வது பழியே யல்லது பான்மையதாகுமோ? பெரியராகிய நீர், நெறிதவறிப் பேதையாகிய என்னை விரும்புதல் முறையன்று. புலி பசியுற்றுழும் புல்லைத் துய்க்குமோ?' என்று எந்திழை இடித்துரைக்குமளவில், தொண்டகம் துவைப்பத் துடியியம்பக் குன்றக்கோமான் வரும் ஆரவாரம் கேட்டது. மடக்கொடி மனம் வெருவி, எந்தையறியின் யாதாகுமோ என நடுநடுங்கி, முருகனை முகநோக்கி, 'வேடுவர் வெய்யவர்; இவண் நில்லாது இனிக் கடிதோடுமின்' என்றனள். (தொடரும்.)

---

உ

திருச்சிற்றம்பலம்.

# வெஞ்சமாக் கூடலூர்.

---

(முற்றொடர்ச்சி 35-வது பக்கம்.)

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

---

சென்ற இதழில் இத்தலத்தினைப்பற்றி யெழுதிவந்த வற்றில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இங்குவந்து பாடிக் கடவுளை வணங்கிச் சென்றமைக்குப் பெரிய புராணத்திலிருந்து ஆதாரம் காட்டினேன். அவை யொழியப் பின் வருஞ் செய்யுளை யங்குப் படித்துக்கொள்ளும்படி யன்பர்களை வேண்டிக் கொள்கிறேன்.

பருவமுறுப் பொன்னிப் பாண்டிக் கொடுமுடியார் தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரிசுடர்மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர் தம்
பொருவி றனம்பல போற்றிக் குணநிசைப் போதுகின்றார்.

என்பதாம். (திருஞான—கூ௲அ.)

## ஒருகல்வெட்டு.

முற்குறித்த வெஞ்சமாக் கூடலூர்த் திருக்கோயிலிற் பல கல்வெட்டுக்களிருப்பதாகச் சென்ற இதழிற்குறித்தேன். அவற்றுள் ஒன்று பின் வருவது. அது இருபத்தைந்து வரியாய் வெட்டப் பட்டிருக்கிறது.

கற்சுவரில் உள்ளபடி

1. ஜெயகெஸரி
2. ஸவஸ்திஸ்ரீகொனெரினமைய
3. கொணடானஆளுடையாா
4. திருவெஞசமாககூடலஆளுடை
5. யாாதெவாகனமிகளுககுநமஒலைகுடுதத
6. பரிசாவதுவாரைதிருவெஞசமாககூ
7. டலஆளுடையாா.........டுததொமஇவவூா
8. ககுஎலலையாவதுவடபாலசளளைமடையும
9. மேலபாலசூரியபபாழியுமகீழபாலநாடுகாண
10. மேடுமதெனபாலபொததைபாழியுமஇனனை
11. கெலலைககுடபடடபுறறுததெறறியுடுமபொடி
12. ஆனமதவழிமெனைகியமாமுமகீழநோககியகிண
13. றுமஆளுடையாாதிருவெஞசமாககூடல ஆளுடை
14. யாாககுககொடுததொமஇவவூரிலுளளஇறைபுரவு [சிதத
15. ாயமஎலலைவையுகவைமறறுமஎபபொபயிரபபடட
16. இதுவுமமனறுபாடுதெணடகுறறமுமசுறறுபபுல
17. பாகமுறறூடடுமஆளுடையாாதிருவெஞசமாககூட
18. லஆளுடையாாககுககொடுததோமநநதமாாளுும
19. பாறபடுததுககொடுககஇபபடிககுஇவவொ
20. லையிலநமஎழுததுஇடடுககொடுததோமஇப
21. படிககுசசநதிராதிதத........றசசெலவதாகசசெமபி
22. லுமசிலையிலுமவெடடிககொளக
23. இபபடிககுஇவைவிலாடததரையனஎழு
24. ததுஇபபடிககுஇவைகாடுவெடடிஎழு
25. ததுஇதுபனமாஹெஸவரரக்ஷை



## இதன் திருத்தம்.

ஜெயகேசரிஸ்வஸ்தி ஸ்ரீ கோனேரின்மைய கொண்டான், (1) ஆளுடையார் திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையார் தேவகன்மி களுக்கு, (2) நம் ஓலை கொடுத்த பரிசாவது:—

வாரை (3) திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையாருக்குக் கொடுத்தோம்.

இவ்வூர்க்கு எல்லையாவது—வடபால் சுள்ளை மடை (4)யும், மேல்பால் சூரியப் பாழியும், (5) கீழ்பால் நாடுகாண்மேடு (6)ம், தென்பால் பொத்தைப் பாழியும் (7) இந்நான் கெல்லைக்குட்பட்ட புற்றுத் தெற்றி (8) உடும்பொடி (9) ஆமை தவழி (10) மேனோக் கிய மாமும், கீழ்நோக்கிய கிணறும் (11) ஆளுடையார் திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையார்க்குக் கொடுத்தோம்.

இவ்வூரிலுள்ள இறைபுரவு, சித்தாயம், எல்லை, யுகவை, (12) மற்றும் எப்பேர்ப் பயிர்ப்பாட்டம் (13) இதுவும், (14)மன்றுபாடு, தெண்டகுற்றமும், சுற்றுப்புல் போக முற்றூட்டும் ஆளுடையார் திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையார்க்குக்கொடுத்தோம். நந்தமாரளும் (15) பாற்படுத்துக் (16) கொடுக்க.

இப்படிக்கு இவ்வோலையில் நம் எழுத்து இட்டுக் கொடுத்தோம். இப்படிக்குச் சந்திராதித்த வரை செல்வதாகச் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க.

இப்படிக்கு இவை விலாடத்தரையன் எழுத்து. (7)

இப்படிக்கு இவை காடுவெட்டி எழுத்து. (17)

இதுபன்மாஹேஸ்வர ரக்ஷை. (9)

என்பதாம்.

## விளக்கக் குறிப்பு.

(1) கோனேரின்மைய கொண்டான் என்ற பெயர் கோனேரி கோண்டான், கோனேரி மேல் கோண்டான் என வழங்கப்படுகிறது. இந்த மூன்று பெயரும் ஒருவனையே குறித்ததாதல் வேண்டும். இவ்வாறு ஒரு பெயர் சிறிது மாறுபாட்டோடு ஒருவரைக் குறித்து வருதலைப் புறநானூற்றில் பாடப்பட்டோர், பாடினோர் பெயர் வரிசையிற்காணலாம். இதில் முதலிரண்டு பெயரும், நிகரற்ற ஆளுகையுடையவன் என்றும் பின்னது மேல் கோண்டான் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற கோனேரி என்பான் என்றும் பொருள்படும். மேல் கொண்டார் என்னும் சிறப்புப் பெயர், தஞ்சை சில்லாவின் வேளாண்மாந்தராகிய கள்ளர்களுக்கு வழங்கி வருவதை யின்றும் அறியலாம்.

கோனேரி மேல் கொண்டானது சாசனங்கள் பேரூரிலும், கருவூரிலும், கோயமுத்தூர் சில்லாவில் இன்னும் சில விடங்களிலும் இருக்கின்றன. இவன் கொங்கு நாட்டை யாண்ட அரசர்களில் ஒருவனாதல் வேண்டும். இவன் சிலவிடங்களில் திரிபுவன சக்ரவர்த்திகள் என்ற அடையோடும், ஜெயகேசரி என்ற அடையோடும், ஒரு அடையும் இல்லாமலும் அழைக்கப்படுகிறான். இதனால் முதலில் கோனேரி மேல் கொண்டான் என்று பெயர் கொண்ட இவ்வரசன், பகைவர்களை வென்று ஒரு காலத்தில் ஜெயகேசரி என்ற பட்டமும், மற்றைச்சோழ, பாண்டிய மன்னர்களையும் வென்று திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற பட்டமும் பெற்றானாதல் வேண்டும். (திரிபுவனம் என்றது சேரசோழ பாண்டி மண்டலங்களாகிய மும் மண்டலங்களையும் குறிக்கும்.)

(2) தேவகன்மிகளென்றது, ஆலயங்களில் கடவுளுக்குப் பணிவிடை செய்பவர்களைக் குறிக்கும்.



(3) 'வாரை' என்றது (வரியிலியாகிய) உரிமை யென்று பொருள் படுகின்றது. இக்கல்வெட்டு 17, 18 வரிகளில் முற்றூட்டும் கொடுத்தோம் என வருதலையும் நோக்குக.

(4, 5, 6, 7) இவ்விடங்கள் இன்னும் இருக்கின்றன. (6) நாடு காண்மேடு என்றது, கொங்கு நாட்டின் உள் நாடாகிய வெங்கால நாட்டை யொருங்கே காணத் தக்கதான ஒருமேட்டை.

(8) 'தெற்றி', என்றது திட்டைகளை.

(9) 'உடும்போடி', என்றது, புன்செய்களில் விளைநிலங்களை யடுத்துள்ள தரிசுகளை.

(10) ஆமைதவழி, என்றது நன்செய் நிலத்தை யடுத்துள்ள தரிசுகளை.

(11) 'மேனோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும்', இத்தொடர்கள் நன்னூல் மயிலைநாதருரையில் "பொருள் முதலாறும்" என்ற சூத்திரத்துக்கு உதாரணம் காட்டப்பட்டிருக்கின்றன.

அடிக்குறிப்பில், இவை சிலாசாசன வாக்கியங்களென்று குறிக்கப்பட்டிருக்கின்றன.

(12) இறை, புரவு, சித்தரையம், எல்லை, யுகவை—என்பன ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரியைக் குறிப்பனவாகும். இது, இன்ன வரியெனக் கல்வெட்டு ஆராய்ச்சி வல்லார் விளங்க வெழுதிற் பெரிதும் பயனுடையதாகும். சித்தாயம் எனவும் கொள்ளப்படும்.

(13) எப்பேர் பயிர்ப் பாட்டம் என்றது—எவ்விதப் பயிர்களுக்கும் இறுக்கவேண்டிய வரியென்பதாம். பாட்டம், இப்பொருளாதலை ஒழுக்கு நீர்ப்பாட்டம் (ஓடும் தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டதற்குவரி) நிலை நீர்ப்பாட்டம் (தேங்கியுள்ள தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டதற்குவரி) எனச் சோழவமிசச் சரித்திரத்து வருதலால் அறிக.

(14) மன்றுபாடு, தெண்ட குற்றம், சுற்றுப்புல் என்பன விளங்கவில்லை.

(15) நந்தம் மாரனர்—என்றது அரசாங்கத் தொழில் பார்ப்பவர்களைக் குறிப்பதாகல் வேண்டும். அன்றி, நம் தமரானரும் என்று கொள்ளினும் அமையும்.

(16) பாற்படுத்துக் கொடுக்க—சுவாதீனம் செய்து கொடுக்கக் கடவர். இங்குச் சுவாதீனம் என்ற வடசொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் பாற்படுத்தல் என்பது. "அலகிழற் பட்டனுக் கென்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்ற திருப்பல்லாண்டிலும் இச்சொல் ஆளப்பட்டிருத்தல் காண்க.

(17—18) இவை சிறப்புப் பெயர்கள், முன்னது சாட்சிக்காரன் பெயரும், பின்னது எழுதினோன் பெயருமாகும்.

(19) இது பன்மாகேசுவர ரக்ஷை—என்றது மேற்காட்டிய நில உரிமையை மாற்ற அல்லது கைப்பற்றிக் கொள்ள யாரேனும் எண்ணினால் அதைத்தடுத்துக் கடவுளுக்கு உரிமை நாட்ட அடியார் அனைவருக்கும் சொந்தம் உண்டு என்பதைத் தெரிவிக்கின்றது. மாகேசுவரர் என்றது அடியார்களை, ரக்ஷை என்றது அவர்களின் பாதுகாவலில் இருக்கத்தக்கது என்பதாம்.



உ

# அறிவு.

(ஓர் ஆங்கில நூலிற்கண்டபடி)

---

திருவாளர், ஒளவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள், ஆசிரியர்,
க. த. சங்கம், தஞ்சை.

---

அறிவாவது சொல்வாரது இயல்பு நோக்காது சொல்லப்பெறும் பொருளின் பயனை நோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வதாம். சொல்வார் தாம் உயர்ந்தோர், தாழ்ந்தோர், நட்டோர், பகைவர் எனப் பல்வகையினராதலோடு, முக்குணவயத்தராதலானும், இவருள் ஒவ்வொருவரிடத்து ஒவ்வொன்று ஒரோ வழிக் கேட்கப்படுதலானும், அவரது இயல்பு நோக்காமை வேண்டும் என்பது புலப்படும். அன்றியும், வேண்டப்படுவது பொருளேயன்றிப் பிறிதன்று. ஆகவே, "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்—மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்னும் தமிழ்மறை துணியப்பட்டது. படவே, சொல்வாரது இயல்பு நோக்கிப் பொருளின் பயன்காணாது ஒழிதல் அறியாமை என்பதும், அதனையெய்தும் பயன் துன்பமே யென்பதும் பெறப்படுகின்றன. இவ்வுண்மை கீழ்க்காணும் பொருட்கதையில் விளங்குதல் காண்க.

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான்று எழுதரும் பருதியஞ் செல்வன் கீழ்க்கடல் முகட்டில் எழுமுன், வெள்ளி முளைப்ப விடியல் வந்தது; ஓதல் அந்தணர் பாடினர்; கூவின பூங்குயில்; கூவின கோழி; குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்; இருஞ்சேற்றகன்வயல் முட்டாட்டாமரைத்துஞ்சி வைகறைக் கட் கமழும் நெய்தலூதி, எற்படக் கண்போல் மலர்ந்

காமர்சுனை மலரை அஞ்சிறைவண்டின் அரிக்கண மொலித்தன. இவற்றினிடையே, முகையவிழ்ந்த முருக்கலரொன்றை வண்டினஞ் சூழ்வந்து முரலாநிற்ப, "ஐயகோ! ஐயகோ!!" எனும் அழுகுரலொன்று, அவ்வலர்க்கீழ் விளங்கிய அழகிய தளிரிடையெழுந்து, கேட்போர் செவிப்புலம்புக்கு, அவர் தம் மனத்திடை அருளூற்றெழச் செய்தது. இங்ஙனம், எவ்வுயிர்க்கும் இன்பக் காட்சி நல்கும் இளஞாயிறு தோன்றுங்காலைத் தோன்றிய துன்பக் காட்சி ஆண்டுற்ற உயிர்ப் பொருளனைத்தும் மருளச் செய்தது. யாண்டும் அமைதி நிலவிற்று. சிறு சுரும்புந் தேனாடிற்றன்று. புனையாவோவியம் கடுப்ப யாவும் போந்தனவாக, மீட்டும் அப் புலம்பிசை கல்லும் புல்லும் கனிந்துருக எழுந்தது. ஓசையியலுணர்ந்தாருளராயின், அது, இறந்துபடுநிலைக்கண் பல்பொறிப் பூச்சியொன்றிடும் மெல்லிசை யாமெனவுணர்வர். மற்று, யான் அவ்வறிவிலேன் ஆதலின், நெடுங்காலந் தாழ்த்துப் பின்னரே யுணர்ந்தேன். உணர்ந்தேன், அவ்வோசையை நனித்துக்கேட்குமவா மீக்கொண்டேனாக, ஆண்டெழுந்த பொருண்மொழி பின் வருமாறு கேட்டேன். அது,

"இருநிலம்புரக்கும் இறைவ! எவ்வுயிர்க்கும் நலம்பயக்கும் இயவுள்!! இச்சினைகளை யான் ஈண்டு இட்டிறத்தல் ஒல்லுமா! ஆ! இவை தோன்றிய நாழிகைகூட இன்னும் கழிந்தநின்றே! அந்தோ! இதற்குள் யான் இறக்கின்றேனே! இன்னாதம்ம வுலகம், இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே என்றெல்லாம் பெரியோர் கூறுதல் உண்மையே! இறைவ! இறந்தற்குப் பணித்த நீ எனக்கு இப்பசிளஞ்சினைகளை யளித்தல் எற்றுக்கோ? இது முறைகொல்! யான் இறந்துபடின், இவ்வருமந்த சினைகளைப் புரக்கவல்லுநர் யாவர்கொல்லோ? உயிர்க்குணவளித்தற்கு நீ உளையெனினும், ஒரு பற்றுக்கோடுமின்றி உயிர் நீத்தற்கன்றே என் உளம் உளைகின்றது! அந்தோ! ஏ! உலகே! என்னே நின் இயற்கை!! உனைத்துறக்கும் நிலைக்கணுற்ற என் உள்ளத்தை இங்ஙனம் தளைசெய்தலே நின் பண்புபோலும்!! நன்று! நன்று! ...ம்மவோ! புலன்கலந்த பொறிகலங்க நெறிமயங்குகின்றதே! ...றிவு அழிகின்றதே! ஆவியும் அலமருகின்றதே!! ஐயகோ!





யாரொடு நோகேன், யார்க்கெடுத்துரைப்பேன்! ஆசா கருளினர் யார்கொலோ. ஆ!........" என்பது.

இங்ஙனம் கூறிப் புலம்பிக்கொண்டிருக்கும் பல்பொறிப் பூச்சி (வண்ணாத்திப்பூச்சி) ஒன்றினருகே பச்சிலைப் புழுவொன்று போந்து, இவ்வுரைகேட்டு எரியிடையிழுதென இளைந்து நின்றது. கண்ட அப்பூச்சி "உடைகலப்பட்டோர்க்கு உறுபுணை தோன்றியாங்கு, இடர்ப்படும் என் முன்றோன்றிய அன்னாய்! வாழி! ஆருயிர் அலமா அழுது சாம்புவேனுக்கு நீ ஓர் உதவியருளல் கூடுங்கொல்லோ! உற்றுழி உதவுதல் உரவோர் கடனாதலின், உன்னைக் காண்டலும், உதவி நாடிற்று என் உள்ளம்" என்றலும், புழுவும் "பிறருறு விழுமம் துடைத்தல் சால்பெனப் பெரியோர் கூறுவர். அவர் வழி நிற்றல் கற்பவை கற்பதின் அழகு. ஆதலின், நின்மாட்டு எய்திய துன்பம் யாது?

"கடல்பாடவிந்து தோணி நீங்கி
நெடுநீ ரிருங்கழி கடுமீன் கலிப்பினும்"

இயன்றன செய்தற் கிடையேன். கூறுக" என்றது.

இக்கூற்று பூச்சியின் செவிப்புலம்புக்கதும், அது ஒருவாறு மனந்தேறி, "பைந்தழை வாழ்க்கை பரித்தோய்! ஆவியோ நிலையிற் கலங்கியது. அது என் யாக்கையின் அகத்ததோ புறத்ததோ அறியேன். இந்நிலையில் இறைவன் எனக்கு இப்பசிளஞ்சினைகளை யருளியுள்ளான். அவற்றையும் அறிவிலியாய யான் இம் முருக்கிலையிலிட்டுளேன். அவற்றை எனக்குப் பின் களைகணாய் நின்று புரப்பார் ஒருவரையும் காணாது மறுகுகின்றேன். இவற்றையருளிய இறைவர்க்கு அளித்தல் கூடும் என்பது உறுதியே எனினும், என் உள்ளந் தடுமாறுகின்றது. ஆகலின், உற்றாரின்றி யுயங்கும் என் முன் ஒருதனித்தோன்றிய நீயே களைகணாய் நிற்பாய்கொல்! அங்ஙனம் நிற்றல் உனக்கு அரிதன்றன்றே. அன்றியும், ஆவி துறக்கும் நிலையிலிருக்கும் என்னுடைய இப்புல்லிய வேண்டுகோளை மறாது ஏற்றருள்க. இது நினக்குப் பேறமாகும்," என்றது.

புழு :—ஆம். பேராறமே. ஆயினும் இவற்றை யான் புரத்தல் யாங்ஙனம்? இவையும் என் இனத்தைச் சார்ந்தன வல்லவே!

பூச்சி :—சாராமையால் வரும் குற்றமொன்று மில்லை. யான் கூறும் உணவைமட்டில் நீ அருத்தியொடு அளித்துவரின், ஒருவகை இடையூறும் நோராது. இது முற்றும் உண்மை.

புழு :—அற்றேல், உரைத்தருள். நின் உடல் நிலையும் குன்றி வருகின்றது. காலம் தாழ்த்தற்க.

பூச்சி :—கூறுவல். செடிகளின் இளந்தளிரும் பனிநீரும் தாம் அவற்றிற்குத் தக்க உணவாம். வேறு எவையேனும் அளிக்கப்பெறின், அவை உண்ணாது இறந்துபடும். ஆகலின் இக்கூறிய உணவை...யே... அ .....

என்று கூறிக்கொண்டே உயிரை விடுகின்றது.

கண்டுகலங்கிய புழுவிற்கு அச்சினைகளையும், அவற்றிற் கெனப் பணிக்கப்பெற்ற உணவையும் நினைத்தொறும் உள்ளம் நெக்குருக, நினைவு தடுமாறலுற்றது. இது இயற்கையே. செத் தாரைக்கண்டு சாவாரும் வருந்துதல் இயல்பன்றே! தாந்தாமும் தம் ஆற்றலறிந்தன்றோ ஒவ்வோர் பணியை ஆற்ற முன் வரல் வேண்டும். எண்ணித்துணிக கருமம். துணிந்தபின் எண்ணு வம் என்பது இழுக்கன்றோ! நிற்க, செயக்கடம்பூண்ட பணியை யெவ்வாற்றானும் செய்து முடித்தலும் வேண்டுமன்றோ. இறந்த தனை எண்ணுதலால் இனிப் பயன் யாதேனும் எய்துமோ? மெய்வருத்தம் பார்த்தல், பசிநோக்கல், கண்டுஞ்சல், செவ்வி யருமை பார்த்தல், அவமதிப்புக் கொள்ளல் ஆகிய இவற்றைக் கருமமே கண்ணாயினார் கண்ணாரன்றே. சிறுசினை புரக்கும் பெரும்பணி மேற்கொண்ட புழு ஒருவாறு தேறி, "ஐயகோ! இவற்றை யான் எங்ஙனம் புரத்தல் கூடும்? இளந்தளிரும் பனி நீரும் எவண் கிடைக்கும்? கிடைப்பினும் யான் எவ்வாறு கொணர்வேன்? இச்சினைக்குட் பிறங்கும் பூச்சிகள் பறக்குந் தன்மைய; யான் அவ்வினத்தைச் சாரேன். இயற்கையான் பட்டயான் புரத்தற்கு உடன்பட்டேனே! என்னே என்



அறிவிருந்தவாறு!! இவற்றினின்றெழும் பூச்சிகள் சின்னாட் களிற் பறந்தெழுமே, அஞ்ஞான்று யான் அவற்றை எவ்வாறு அடக்குதல் கூடும்! ஆ! என்ன காரியம் செய்தேன்! 'ஆய்ந் திடும் உணர்வொன்றில்லார் அலமால் இயற்கை அம்மா!' எனப் பெரியோர் கூறுதல் எத்துணை யுண்மையுடைத்து," என வீழ்ந்து சோர்ந்து, பின்னர்ச் சிறிது தெளிந்து, "இனியான் இங்ஙனம் வருந்துதல் கூடாது. இதனை முன்னரே நன்கு ஆராய்ந்திருத்தல் வேண்டும். 'வினைபகையாவுள்ளும் வினைபுமாயினும்.........தற்றக வுடைமை நோக்கி, மற்றதன், பின்னாகும்மே முன்னியது முடித் தல்' என்பர் நல்லிசைச் சான்றோர். கழிந்தன பற்றிக் கலங்கு துயருழத்தல் என் நலத்திற்கே கேடுதரு மொன்றாகலின், செய்தல் மேற்கொண்ட இப்பணியை, அறிவின் மிக்கார் பொருளுரை கேட்டுத் தக்கன தேர்ந்து செய்வல். இதுவே யான் இனிச் செயற்பாற் றன்றிப் பிறிதொன்று மன்று" எனத் தேர்ந்து நின்றது. அக்காலை, தேனூண்சுவையினும் ஊனூண் சுவையே உயிரினும் விரும்பிவாழும் பூனை ஒன்று ஆயிடைப் போதந்தது. கண்டபுழு அதனை யளவளாவித் தான் மேற்செயற்கேற்ற வினையை யறிய அவாக்கொண்டது. கொள்ளினும், அதன் உளத்துச் சிறிது நாழிகைக்குள் அப்பூனை தன் வேண்டுகோட்குச் செவி சாய்க் காது, தனக்கும், தன்னுழைக் கையடையாத் தரப்பெற்ற சினை கட்கும் ஊறிழைக்கினு மிழைக்கும் என்னும் ஓர் எண்ணம் எய்த அது அம்முயற்சியைக் கைவிட்டது.

கைவிடலும், போன வெஞ்சுரம் புளியிட வந்தாங்கு, மறந்திருந்த வருத்தம் மீட்டும் அதன் மனத்தே தோன்ற, அது சிறிதுதேறி, தன் மனக்கியைந்த அறவுரை கூறும் ஆற்ற லுடையார் இனியாவருளர் என்னுமோர் ஆராய்ச்சியைப் பின்ன ரும் செய்தல் தொடங்கிற்று. ஆவ்வுழிக் கும்பிடப்போன தெய் வம் குறுக்கே வந்தென, வானிற் பறந்துழலும் வன்சிறைப்பருந் தொன்று அதனருகே சென்றது. இதனை யப் புழுக்காண்டலும், தன் மனத்திற் பலதிறப்பட்ட எண்ணங்களைக் கொண்டது. அவற் றுள், "இப்பருந்தினும் அஃகி யகன்றவறிவுடையார் யாவருளர்? மனத்தானும் எண்ணற்கியலாத சேணிற் பறத்தலும், ஆ…

டிருந்தே, மண்மீதியங்கும் திற்றிகளை (ஈண்டுத் தின்னற்குரிய சிற்றுயிர்களை யெனக் கொள்க)க் கண்டு, அவற்றின்மேற் குறிபிழையாது ஞெரேலெனப் பாய்ந்து படிந்துண்டலுமாய உயரிய செயல்களைச் செயல்வல்லார் வேறொருவருமில ரன்றே! ஆகலின், இதனிடை, யான் எனக்காவனவற்றை யுசாவி யறிகின்றேன்" என்பது மொன்றென்க.

இங்ஙனம் எண்ணி முடிபுசெய்து கொள்ளும் அப் புழுவிருந்த புலத்திற் கயலிருந்த வயலொன்றில் வேறு பருந்தொன்று வாழ்ந்து வந்தது. அதற்கும் அப்புழுவிற்கும் நெருங்கிய நட்புமுண்டு. அந்நட்புரிமை யேதுவாக, புழு, அப்பருந்தினை வரவழைத்துத் தான் அச்சினைகளை வளர்க்கு மாற்றைத் தெரிந்துகோடலை நாடி நிற்ப, செல்வக்காலை நிற்பினும் அல்லற்காலை நில்லா மாட்சியமைந்த கேண்மைசால் பருந்தும் காகதாலியமாகப் புழுவைப் பார்த்துச் செல்வான் வந்தது. வரக்கண்ட புழுவும் கழிபேருவகைகொண்டு, "அன்பு கெழுமிய நண்பே! வருக. இன்பங்கனியும் நின்முகங்கண்டும் யான் இன்பமின்றியிருத்தலை யறிதியோ? இங்ஙனமிருக்கு மெனக்கு ஒரு மாற்றுக்கூறல் வல்லைகொல்லோ?" என்றது.

பருந்து:—அறிவல். மற்று நின்னையுற்ற துன்பம் ஒன்றுண்டென அறிந்தனனேயன்றி அது இத்தன்மைத்து, இவ்வேது வுடைத்து என்பனவற்றை யறியேனாகலின், மாற்றுக்கூறல் யாங்ஙனம் இயலும்?

புழு:—நன்று. கேட்டிசின். எனக்கு நின்னொப்ப உயிர்த்தோழமை பூண்ட சேடப்பூச்சி (வண்ணத்திப்பூச்சி) யொன்று ஈண்டுச் சின்னாட்களுக்கு முன் வாழ்ந்து வந்தது. அதன் வழியெச்சமே ஈண்டு நீ காண்குறும் பச்சிளஞ் சினைகள். இவற்றை அதுதான் இறக்குங்காலத்து ஈன்று, என்னையும் புறந்தருமாறு பணித்ததுமன்றி, இவை குடம்பை தனித்தொழியப் பறந்தேகு நாள்காறும் தக்குணவளித் தோம்புதல் செய்யுமாறும் கூறியகன்றது. அவ்வேவம்படையேற்ற யான் அங்ஙனம் செய்யுமா றறியாது அலமருகின்றேன்.



பருந்து:—என்னை?

புழு:—அவ் வாற்றினை யான் அறியேனாகலின்.

பருந்து:—என் அறியாய்?

புழு:—அப்பூச்சியோ பறக்குமியல்பிற்று: மற்று, யானோ ஊர்வனவற்றைச் சார்ந்த புல்லிய புழுவானேன். பறப்பனவற்றை ஊர்வன புரத்தல்,

"பாய்திரைப் புணரி பாடவிந் தொழியினும்,
காய்கதி ரிரண்டுங் கதிதிரி போடினும்,"

கூடாது என்பது உண்மையன்றோ. அது பற்றியே இம்மயக்கம் எய்தியது.

பருந்து:—மயங்கல் வேண்டா. நுனித்து நோக்கின், இவற்றைப் புரத்தலும், ஏற்ற வுணவு கொடுத்தலும் நின்னா லெளிதிற் செயற்பாலன வென்பதே தோன்றுகின்றது. அன்றியும், செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல, நினைத்தொறும் நினைத்தொறும் இம்முடிபே எய்துகின்றது.

புழு:—உய்ந்தேன்! உய்ந்தேன்!! கூறுக.

பருந்து:—கூறுவல். தடையுமின்று. மற்று, யான் கூறுவனவற்றை நீ உள்ளவாறே யுட்கொள்ளுவாயோ வென்றையுறுகின்றேன். எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அன்றி யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருளின்கண் மெய்ப்பொருள் காண்டல் கூடும் என்னும் உறுதி நோக்கு (Faith) நின்னுழை யுளதாலன்றி, என் மொழியின் உண்மைப்பொருள் புலனாகாது. இந் நோக்கின்றிக் கேட்டல் அரங்கேறி யாடல் புரிவாரது நோக்கினோடொக்கும்.

புழு:—ஆம். சார்ந்ததன் வண்ணமாதலே மனவியல்பு. எந்நோக்கங் கொண்டு எப்பொருணோக்கப்படுகின்றதோ, அந்நோக்கிற் கமைந்தே அப்பொருளுந் தோன்றும். ஒருவனுக்

பருந்து விரும்பிற்றன்று. 'இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும் அருள் நன்கு உடையாராயினும், சான்றோர், பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்' என்பர் பெரியார். ஆகவே, பருந்தும் கலாய்த்துப் பழியெய்தற்கு அஞ்சி யகன்றதென்க.

இங்ஙனம் விழுமிய நட்புக்கடம்பூண்ட பருந்து பிரிதலும், புழு மிக்கதோர் மருட்சிகொண்டு, செய்தொழிலறியாது திகைத்து அருகுகிடக்கும் சினைகளைக் காண்டலும், கண்ணீருகுத்தலும், பன்முறை யவற்றைச் சூழ்வரலும் செய்து கொண்டு வரும். இடையிடையே பருந்துகூறிய மொழிகளை எழுத்தளவாய் ஆயும்; பொருட்பயனைப் பன்முறையும் சூழ்ந்து நோக்கும்; தன் யாக்கைப் பண்பையும், பூச்சியின் பொலிவையும் மனத்தானொப்பு நோக்கும். அதுகாலைப்பின் வருமாறும் நினைக்கும். அது:

"மாந்தர் இனத்தியல்பதாகும் அறிவு" என்பது தமிழ்மறை. இதுபற்றியன்றே, உயர்ந்தோர் கூட்டமே யுறவாய்க் கொண்டுழலும் இப்பருந்தும் மிக்க அறிவமைதியுடையதா மென்றெண்ணிக் கெட்டேன்! ஒருகால், அது இம்முறை நெடிது சேணிற் பறந்திருக்கும். அதனாற்றான் இக்கலக்கம்! ஆ! என்ன அலகைத் தன்மை! உலகத்தோர் உண்டென்ப தில்லென்பான் வையத்து அலகை யென்று எண்ணப்படுமன்றே! ஆ! உயிர்க் கூட்டத்துள், உயர்ந்தாரோடு கூடி வாழ்வனவும், கூடி வாழ்வதாகத் தம்மை யுயர்த்திக்கூறிக் கொள்வனவுமாய பல வுயிர்கள் முடிவில் எத்துணைப்பேதைமையும் கொடுமையும் உடையவாய்த் தோன்றுகின்றன. என்ன உலகம்! பெறுதற்கரிய யாக்கை தமக்கு எய்திற்றென்றால், அதுகொண்டு அறிவும் ஒழுக்கமும் அமையப்பெற்று, தக்கவின்ன, தகாதனவின்னவென ஒக்க வுன்னி, ஒப்பன வற்றைக் கோடலன்றோ யாவர்க்கும் ஒரு படித்தாய் வேண்டப்படுவது.

"கன்று முன்னூறு கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு"

குமன்றே, இஃது ஓர் உயிர்க்கு எய்தாவிடின் அதன் பொலிவு
யாக்கை. நிற்க, இப்பறவை அவ்விசும்பைப் படர்ந்து



சென்று செய்யும் தொழில் யாது கொல்! நெடுங்காலமளவும் இஃது ஆண்டுப் பறந்து கொட்புறுதலின் உட்கிடையென்னோ? இதனொடு அங்கு உரையாடி நல்லறிவு கொளுத்தவல்லார் யாவரோ? இவ்வனைத்தும், எண்ணுந்தோறும் மயக்கத்தை யன்றோ தருகின்றன. என்ன இறும்பூது பயக்கும் வாழ்வுகாண் இதன் வாழ்வு!" என்பது.

இங்ஙனம், அது, நினைத்தவண்ணம் பண்டேபோற் றன் சினைகளைச் சூழ்வந்து காவல் புரிந்து வந்தது. அதுபோது, பருந்தின் மெல்லிசைமட்டிற் புழுவின் செவிப்புலனாதலும், அது, முன்னைக் களிப்பின்றெனினும், சிறிது தேறி, நோக்கத்துழையும் என்பதற்கஞ்சி, இனிமை தோன்ற ஒருவண்ணம் எதிர்நோக்கி நின்றது. பருந்தும் வந்தது. இரண்டன் நட்பும் நந்துதற் பொருட்டன்றாகலானும்,

"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பக லமையமும் இரவும் போல
வேறுவே றியல வாகி மாறெதிர்ந் துள"

என்னும் பொருளை இவை நன்குணர்ந்தவை யாகலானும், முன்னர் நிகழ்ச்சியிற் புழுவின் சினத்தை யறவே மறைய ஒன்றோடொன்று சிறிது அளவளாவிப் பின் வருமாறு மீட்டும் அவை சொல்லாடல் தொடங்கின.

பருந்து:—யான் கூறுவனவற்றை, முன்னரே கூறியுள்ளவாறு, உறுதிநோக்கும், ஒப்பன கொள்ளும் உளமும் கொண்டு கேட்பையேற் கூறுவல்.

புழு:—ஆயின், அவை என்னிடத் திலவென வெண்ணுதிபோலும்! நன்று நன்று!! ஆ! கேள்விவா யெய்தும் எவ்வகைப் பொருளையும் உறுதிநோக்குக் கொண்டு, உளத்திற்கோடலே என்னியல்பென யான் கூறியிருக்குமது நின் நினைவினு ணில்லை கொல்லோ!

பருந்து:—"உணர்ந்தன மறக்கும், மறந்தனவுணரும்" என்பர் பெரியோர். இனி மறவேன்; பொறுத்தருள்க. நிற்க, யான் முன்பு கூறியன நின்னையும், நின் சினைகளையும் பற்றிப் பொதுவாக வுணர்ந்தன; இற்றைஞான்று கூறப்போவது நின்பொருட் டுணர்ந்த சிறப்புப் பொருளாகும். அது, சுருங்கக் கூறின், நீயும் ஒருபகல் அப்பூச்சியே யாதல் வேண்டும் என்பது.

புழு:—என்னை கூறினை? ஏ, மடப்பருந்தே! நிறுத்துக நின் சொற்பொழிவினை! நின்னொடு நிமிர்ந்தனேயம் இப்பயனைப் பயக்கும் நீர்மைத்தாயின், என் கூறுவது. பாலாகித் தோன்றிச் பருகினர் ஆவிகொள்ளும் ஆலால நீர்மைத்தே நின்னன்பு என்பதே சாலப்பொருந்துவது. பொலிவு, திட்பம் முதலியவில்லா யாக்கையேன் என எண்ணி இன்னணம் என்னை இழித்துக் கூறுவான் செய்த கூற்றேயிது. அறிந்தேன். நின் தன்மையை யான் இன்றே உணர்ந்தேன். நீ பெருங்கொடியை! அறிவிலி! திருந்த வியலாத் தீயை! பேதை!! நாணின்றி என் முன்னிற்றல் நின் மாண்பிற்கே குறைவாம். இனி எனக்கு நின் பொங்குசோறும் வேண்டா; பூசாரித்தனமும் வேண்டா. போதும்! போதும்!!

இவ்வண்ணம் கூறிய புழுவின் நெஞ்சுசுடு நெடுமொழி வன்சிறைப்பருந்தின் மனத்துத் தினைத்துணையும் சினத் தீ கொளுத்திற்றின்று. என்னை, வன்மையுள் வன்மை மடவார்ப் பொறையாகலின். மற்று, அது, அதன்மனத்துத் "திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து—அறனல்ல செய்யாமை நன்று" என்னும் தெய்வத் திருவள்ளுவப் பயனை யெழச் செய்து, உறுவது தோராப் புழுவின்மாட்டு இரக்கமும், அதன் அறியாமைக்குக் கவற்சியுமே தோன்றச் செய்தது. வேறு என் செயும்!! அது அப்புழுவினை, "அன்ப, நீ வெகுண்டு கூறுவனயாவும் வெளிற்றுரைகளே. ஒருபுடை, அவை, நீ இச்சினை மாட்டுப் டொழுகும் போதரவின் உறுதியைப் புலப்படுத்துகின்றன தாயினும், ஆன்ற கேள்வியாற்றோட்ட செவியை யல்லை யென்

ய



பதைக் காட்டாது கழியவில்லை. என் சொற்களை நீ ஏற்றுக் கொள்ளாயெனப் பண்டே யான் கூறினேனன்றோ," என்று கூறிற்று.

புழு:—ஆம். யான் கேட்பனவற்றில் உறுதிப் பொருளைக் காண்டல் கூடும் என்னும் நோக்கத்துடன் ஏற்றுக்கொள்வலென்பதைப் பண்டு கூறியதே யன்றி, இன்றும் கூறுகின்றேன், இனி என்றும் கூறுவேன். உரைப்பார் உரைப்பனவற்றை யுரைத்த வாற்றா னுட்கொள்ளு மியல்பினை யுடையார்க்கு, அவர் உண்மைகலந்தவற்றைத் தாமே யுரைத்தல் வேண்டும். ஒருவாற்றானு மியைபில்லாத வொன்றை யியைத்துக்கூறின் யாவர் தாம் ஏற்பர். நிலையாத வற்றை நிலையின வென்றுணரும் புல்லறிவாண்மை கடையாதல் போல, இயைபில்லனவற்றை யியைபுடையவாக்கிக் கூறலும், கூறக்கேட்டலும் புல்லறிவாண்மை யாதலோடு கடையாதலும் தோன்றிற்றன்றே. நண்ப! சேடப்பூச்சிகளின் சினை பொரிக்கின் கீடங்களாக மாறுமென்பதும், கீடங்களுந் தம் இயங்குதற்றன்மை நீங்கிப் பறத்தற்றன்மையினை யெய்துமென்பதும் முற்றிலும் பொருந்தாக் கூற்றுக்களே. இவற்றோன்ன புன்மொழிகளை நீ யாண்டு, யாங்ஙனம், கேட்டற்குத் துணிந்தனை? இவை யொல்லுமோ வென்பதை நீயே ஆய்ந்து நோக்குக. அங்ஙனமாதல் ஒருகாலும் முடியாதன்றோ!

பருந்து:—இனி வேறு கூறல் எனக்கு இயலாது. வேண்டுமேல் யான் அறிந்தவற்றைக் கூறுவல்; கேள்: யான் வயல் வழியும், வானூறும் படர்ந்து கொட்புறும் பான்மையேன். அங்ஙனம், படருங்கால், இடையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் காணாது செல்வது கிடையாது. அவற்றுள் ஒவ்வொன்றும் நினைவுவல்லார் நெஞ்சும் கடந்து நிற்குந்தன்மைத்து. அவற்றைக் கண்ணுற்றுத் தெளிந்தயான் இவ்வாறு நிகழ்தலுங் கூடுமெனத் துணிந்தேன். ஓர் குறுகிய எல்லைக்கணியக்கமும், தான்வாழும் இலையன்றிப் பிற கண்டறியா

முடைய நினக்குப் பிறவனைத்தும் அரியவும், இயைபில்லவும்,
முடியாதவுமாகவே தோன்றும். கிணற்றுத்தவளை புணரி-
யியல்பை யறியுங்கொல்!

புழு :—அந்தோ! ஆய்ந்திடு முணர்வுதன்னை நினக்கு அவ் வயன்
படைத்திலன்கொல்! அவனைக் காண்பனேல், அற்றதலை
போக, அறாததலை நான்கினையும் பற்றித்திருகிப் பறிப்பேன்!
அறிதியோ!! இக்கூற்று இத்துணையுறுதியுடைத்து;
உண்மையுடைத்து என்பனவற்றையுமோ யான் அறியேன்!
ஆ!! இத்துணைக்காலம் இவ்வுலகிடைப்பிறந்துழன்ற யான்
ஈதறியாது ஒழிவலோ? என்னே நின்மடமை! என் பசிய
நெடிய வுடலையும், எண்ணிறந்த கால்களையும் நோக்குக.
இவற்றை நேரிற் கண்டும், எனக்கு இவ்வுடனீங்குமென்
பதும், பல்வகை வண்ணமமைந்த புத்துடலொன்று எய்து
மென்பதும் எத்துணை இழித்தக்க மொழிகளாகின்றன.
இஃதறியாமையே பேதமை யென்பது. கூறுவோர்க்கு
உணர்வு குன்றினும், கேட்போர்க்கும் அது குன்றுங்
கொலோ?

பருந்து :—(சினந்து) என்னை கூறினை? "யாகாவா ராயினும்
நாகாக்க, காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு",
என்னும் பொய்யில் மொழியினை மறந்தியோ? என்னை நீ
மதியிலி யென்பது உண்மையே. கல்லா அறிவில் கயவர்பாற்
கற்றுணர்ந்த நல்லார் தமது கனம் நண்ணுதலுண்டுகொல்!
இதனைச் சிறிதேயு மறிந்திருந்தும், யான் இவ்வுண்மையைக்
கூறிய வந்தனனன்றே! நின் அறிவுக்கெட்டாதவற்றை
வற்புறுத்திக் கூறநினைத்தலும், அதுபற்றி நின்னுழை யெய்
தலும் என்னிலைக்கு ஏற்பனவல்லவன்றே! வானோக்கி
யெழுங்கால் என்வாய்வழி வரும் இன்னொலி கேட்டோர்க்கு
இன்பம் பயந்து, எனக்கு மதுவழியேயோர் சிறப்பினையும்
நல்குதல் ஒருதலை. இது கிடக்க, நீ இனியேனும் வருவன
வற்றையும், பிறர் கூறுவனவற்றையும் ஒன்றிய வுள்ளமொடு
ஏற்றுக்கொள்க.



இவ்வாறு, புழுவின் புன்மொழிகள் பலவும் பருந்தின் செவி-
யிற் புக்கும் அது வெகுளாது, நாணாது, அன்புடை நன்மொழி
கூறலும், புழு தன் அறியாமைக்கும், அதனாற் சினந்து பிதற்றிய
மொழிகட்கும் உளம் வெள்கி, "அதற்கு நீ கூறும் அந்நம்பிக்கை
யும் உறுதி நோக்கும் என்மாட்டில வென்பாயோ?" என்றது.

பருந்து :—உளவேல், இத்துணை நெடுமொழிகள் பிறக்குங்
கொல்லோ!

புழு :—அற்றேல், அவ்வுறுதி நோக்கு என்னுழை யுண்டாதற்கு
யான் செய்யக்கடவதென்? அன்பு கூர்ந்து கூறுக.

இங்ஙனம் அமைதிசான்ற வுரையாடல் இடைநிகழுங் காலத்
துப் பருந்து சேட்புலம் படர்ந்தது. புழுவும் தன்னைப் பன்
முறையும் நோக்கி, அச்சினையிருந்த முருக்கிலையைச் சூழ்வந்து
கொண்டிருப்ப, அவ்விலையைத் துளைத்துக்கொண்டு எழெட்டுப்
பச்சிலைப் புழுக்கள் அங்குமிங்கு மியங்கத்தொடங்கின. அவை
யாண்டிருந்து போந்தன? அவை அச்சினைக்கணின்று போந்
தனவே! போதாக்கண்ட புழுவின் புந்தியிற் கலக்கமும் மான
முங்கலந்து தோன்றின; கண்ணகன் ஞாலம் கொட்புறல் செய்
தது; உடல் சுமந்து நிற்கும் தன்னையே மாயமோ வென்றெண்
ணிற்று. பருந்து கூறியமொழி யொவ்வொன்றும் அதன் உளத்
துத் தோன்றிற்று. இன்னணம் பருந்தின் முதலுரை யுண்மை
யாதல் காண்டலின், மற்றதும் அவ்வாறாதல் கூடுமெனும் துணி
பும் உடனெய்திய எய்தலும், அது பட்டபாடு யாராற் கூறப்
படுந் தகைத்தாம்!!

பின்னர் நாட்கள் சில சென்றன; பரந்தவிவ் வுலகிற்
றோன்றும் பொருளினும் காட்சியறிவைப் பருந்து உட
னுடன் புழுவிற் குரைத்தலும், உண்மையாய்தலும் இரண்டிற்கும்
மாபாயிற்று. புழுவும் தன்னினங்கட்குத் தனக்கு நேரவிருக்கும்
நிகழ்ச்சியையும், அதுவே யவற்றிற்குமா மென்பதையும் அறி
வுறுத்தும்; உறுத்தினும், அதனையவை ஏலாதே யொழிந்தன,
புழுமட்டிற் றன்றன் மெய்ந்நட்புக்குரிய பருந்துழைக்

## தமிழ்ப் பொழில்.

...யப்பொருள் நிகழ்தற் கேற்ற காலம் எய்திற்றாக, பகல்செய மண்டிலம் பனிக்கடல் முகட்டெழ, பறவை யின்னிசைபாட, சுரும்புந்தேனும் சூழ்ந்தார்ப்ப, கடிக்கமலம் வாய்விள்ள, பூச்சி யினம் பொலிவெய்த, புழுவினங்கள் குழீஇ மறுக, இப்புழுவும் பூச்சியாயிற்று; யாக்கையும் காலொடுமிதக்கும் கவினெய்திற்று; இயங்கியவுடல் பறத்தல் செய்தது; இருமருங்கும் சிறகுக ளெழுந்தன; அவற்றின்கட் பல்வகைய வொளிதெறிக்கும் வண் ணங்கள் தோன்றி யழகு செய்தன.

இவ்வண்ணம், அழகுநிகழ, புத்துடல் பெற்றுப் பூந் தேனுண்டு பொலிவுகூர் சுற்றமொடு புரிந்து வாழ்ந்த சேடப் பூச்சி, பின்னர்ச் சின்னாட்களுட் டன் னின்னுயிர் நீங்குங் கால மெய்தலும், எண்ணரு மின்பங்கனிய, "இம் மறுவின்று விளங் கும் மாயிருஞாலத்து, அறிவு வளர்க்குமாற்றா னமைந்த பொருள் கள் மிகப்பலவுள; அவற்றையாய்ந்து கோடலறிவின் கடன்; அதற்கு இன்றியமையாத வுறுப்பாவது உறுதிநோக்கே (Faith). அதனை அதனருளாலே யடையப்பெற்றேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!! இனி எவை வரினும் வருக. யான் விண்ணகம் படர்குவல்" என்றெழுந்து சென்று விண் ணில் மறைந்தது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600

(இது சங்கக் கல்லூரியினின்று வெளிவரும் பஞ்சாபகேசன் என்னும் கையெழுத்துத் - திங்கள் வெளியீட்டின்கண் முன்னர் வெளிவந்ததோர் பெயர்ப்பு.)

...முதலாவதாக, சங்கக் கல்லூரி ஆ...
சு. துரைசாமி பிள்ளையவர்கள், அப்பாடிகள் வ...
பகுதியைச் சொல்நயம் பொருள்நயம் மலிய முறையாக...
அவையோர் நன்மதிப்பினையும் மகிழ்வொலியினையும் பெற்று, அடிகள் அப்பூதியடிகள் தண்ணீர்ப்பந்தரை அண்மியவரை எடுத் துரைத்து முடித்தனர். இடையிடையே சைவசித்தாந்த மெய்ப் பொருள் நுணுக்கம் சிலவும் இன்னிசையுடன் பெரிய புராணச் செய்யுட்கள் சிலவும் எடுத்துரைத்தனர்.

இரண்டாவதாக, விண்ணமங்கலம் தமிழ்ப் பண்டிதர் திரு. மு. தெண்டாயுதபாணிக் காடவராயரவர்கள் அப்பூதியடிகள் வரலாறெனும் அடிகள் வரலாற்றின் இடைப்பகுதியை வழக்க மாகத் தமக்குள்ள விரிவுரையாற்றற் சிறப்புமிக அவையோர் கேட்டு மகிழ இனிது எடுத்துரைத்தனர். அப்பூதியடிகள் அப்ப ரடிகள் வணக்கங்களை கம்பராமாயண பரதன் குகன் வரலாற் றுடன் ஒப்புமை காட்டி எடுத்துரைத்தனர்.

மூன்றாவதாக, அப்பாடிகளின் பிற்பகுதியினைச் சங்கக் கல் லூரியன் ஆசிரியர்களில் ஒருவராய திரு. சண்முகம் செட்டியா ரவர்கள் தமது நினைவாற்றலும், எடுத்துரைக்கும் ஆற்றலும் இனிது புலப்பட மிகச் செவ்விதாக எடுத்துரைத்தனர்.

அதன் பின், பள்ளியக்கிரகாரம் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை யவர்கள் தமது நுண்ணறிவும் ஆராய்ச்சித் திறனும் புலப்பட அப்பாடிகள் வரலாறு, தேவாரம் ஆகியவற்றிற் சில குறிப்புக்களை இனிது எடுத்துரைத்தனர்.

அவைத்தலைவரவர்கள் அவ்வவ் விரிவுரையின் இறுதியில் விரிவுரைகளின் முடிபு, அருமைப்பாடுகளை எடுத்துரைத்து வந்த துடன் தமது உள்ளம் நிறைந்த தெய்வப்பற்று வெளிப்பட உருக் கம் கொண்ட முடிபுரையும் இறுதியில் நிகழ்த்தி முடித்தனர்.

முடிவில் திருப்படத்திற்குப் பூசனையும், வந்திருந்த அவை யினர்க்கும் விரிவுரையாளர், தலைவர்கட்கும் சங்கத்தின் நன்றியுறி வுரைத்தலும், பொங்கல், சுண்டலாய படைப்புப்பொருள் வழங்கலும் இனிது நிகழ்ந்தன. திருப்படம் அன்பர் கூட்டம் சூழ, தேவார ஒலியுடன் சங்கத்திற் கெழுந்தருள்விக்கப் பெற்றது.

நலம்.

## …பெறலாகும் அரிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| …பரணிமூலம் அரும்பதவுரையுடன் | 1 | 12 | 0 |
| …லகாப்பியம். எழுத்து. நச்சினார்க்கினியம் | 4 | 0 | 0 |
| 198 …தொல்காப்பியம். சொல், சேனாவரையம் | 3 | 8 | 0 |
| நன்னூல் மூலம் (பாக்கட்) திருத்தமானபதிப்பு | 0 | 3 | 0 |
| ஐந்திலக்கணம். பகுதி க. திருத்தமான உயர்ந்தபதிப்பு | 0 | 12 | 0 |
| திருக்குறள் மூலம் (பாக்கட்) சாதாரண பதிப்பு | 0 | 8 | 0 |
| திருக்குறள் பரிமேலழகருரை (பாக்கட்) | 2 | 0 | 0 |
| திருவாசகம் மூலம் சாதாரண பதிப்பு | 1 | 8 | 0 |
| ஷை உயர்ந்த பதிப்பு | 3 | 0 | 0 |
| குமரகுருபரர் பிரபந்தம், கண்ணைக்கவரும் வண்ணம் கட்டடம் செய்யப்பட்டது, அரும்பொருள் விளக்கத்துடன் கூடியது. | 3 | 8 | 0 |
| நானாற்பது உரையுடன் இனியவை, இன்னா, கார், களவழி | 1 | 8 | 0 |
| நளவெண்பா அரும்பொருள் விளக்கத்துடன் | 1 | 4 | 0 |
| மனுமுறைகண்ட வாசகம் அழகிய கட்டடம் உயர்ந்த பதிப்பு. | 0 | 12 | 0 |
| பாரதம் (வில்லிபுத்தூரர்) புதிய பதிப்பு. | 4 | 0 | 0 |
| திருப்புகழ் Vol. 1. 2. | 5 | 0 | 0 |
| உதயனன் சரிதம். (மு. கதிரேசச்செட்டியார்) | 0 | 12 | 0 |
| சுக்கிரநீதி ,, | 4 | 0 | 0 |
| நக்கீரர் (ந. மு. வேங்கடசாமி நாட்டார்) | 0 | 8 | 0 |
| கபிலர் ,, ,, | 1 | 4 | 0 |
| சம்பந்தர் தேவாரம், திருத்தமும் செவ்வியும் ஒருங்கே அமைந்தது | 8 | 0 | 0 |
| திருவிளையாடல் உரை, (ந. மு. வேங்கடசாமி நாட்டார்) அழகு திகழும் பதிப்பு | 7 | 12 | [illegible] |
| நீதிநூற்கொத்து, 'ஆத்திசூடி' முதல் 'நன்னெறி' வரை | 1 | 4 | 0 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு உரை | 1 | 12 | 0 |
| MysticAspect of Tamil Alphabet (P.V.Manicka Naicker) | 1 | 4 | 0 |
| Betwixt Ourselves In The Madras Zoo. (P. V. M.) | 1 | 4 | 0 |

திரு. V. சண்முகம் செட்டியாரவர்கள்,
காந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்.

---

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன்பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| ஆயுள் வரி | உ௫ | ௦ | ௦ | உ௫ | ௦ | ௦ |
| …ண்டு வரி உறுப்பினருக் …கும் மாணவர்கட்கும் | உ | ௦ | ௦ | உ | ௮ | ௦ |
| …வனையர்க்கு | ௩ | ௦ | ௦ | ௩ | ௮ | ௦ |
| …தனி மலர் | ௦ | ௪ | ௦ | ௦ | ௪ | ௦ |